முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 24—5—57 வெள்ளி ஒலி 5

வாட்டுதையோ, 'வரி'க் குதிரை!





அழிவுப்பாதையில்..!

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி; பி. டி.

மனித நாகரிகம் திருப்பு முனைக்கு வந்திருக்கும் நேரம்; ஒரு செல் பிராணியான அமீபாவில் ஆரம்பித்த உயிர்ச்சக்தி பரிணாம ரீதியாக வளர்ந்து, பகுத்தறியும் ஆற்றல் பெற்ற மனிதனாக விளக்க முற்றது. படைப்பின் சிகரமாக மனிதன் விளங்குகிறான். இருந்தும், அழிவுச் சக்திகள் பயமுறுத்த எதிர் காலத்தை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறான். சூழ்நிலையின் தன்மைகளால் விளையும் தொல்லைகளைச் சமாளித்து வாழ, பிராணிகள் உடலுறுப்புக்களையும் அவற்றின் ஆற்றலையும் படிப்படியாக வளர்த்துக் கொண்டன. இந்த வளர்ச்சியின் முதிர்ந்த நிலை தான் மனிதன். பரிணாம வளர்ச்சியில் மனிதன் என்கின்ற கட்டம் குறிப்பிடத் தக்கது. காரணம், உடலுறுப்புகளை மட்டும் உபயோகித்துக் காரிய மாற்றும் நிலைமாறி, அறிவின் துணை கொண்டு, ஆயுதங்களைக் கண்டறிந்து, உடலுழைப்பைக் குறைத்துக்கொள்ளும் நிலையை மனிதன் அடைந்திருக்கிறான். விளைவு, இதர பிராணிகளின் உடலுறுப்புகளின் பலம், தன்மை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றம் போலன்றி, அறிவில்—அதை இயக்குகின்ற கருவியான மூளையின் வளர்ச்சியில் பிரதான மாற்றங்கள் ஏற்பட்டன; உறுப்புகள் பலன் குன்றின. அறிவு பலமடைந்தது. விஞ்ஞானம் வளர்ந்தது. புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இயற்கையின் சூழலுக்கேற்ப வாழ்ந்த நிலைமாறி, இயற்கையின் இரகசியங்களைக் கண்டறிந்து, அவற்றைவென்று ஆட்படுத்தி வாழ முயலும் நிலை பிறந்தது. அந்த முயற்சியின் மகத்தான வெற்றி தான் அணுசக்திக் கண்டு பிடிப்பு! அதுவே மனித நாகரிகத்தின் மகத்தான தோல்வியாகவும் முடிந்து விட்டது!

இயற்கையோடு மனிதன் நடத்திய போராட்டத்தின் விளைபொருள்தான் நாகரிகம். மூலதனத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டார், தன்னை அழிக்கும் கருவைத் தன்னுள்ளே அது அடக்கிக்கொண்டிருக்கிறதென்று! இந்த முடிவு மனித நாகரிகத்தைப் பொறுத்தமட்டிலும்கூட உண்மைதான்! இயற்கையின் ரகசியத்தை—மிக நுண்ணிய பகுதியில் அது தேக்கி வைத்திருக்கும் பிரம்மாண்டமான சக்தியை—கண்டறிந்த மனிதன் அதன் ஆற்றலால் தன்னை அழித்துக்கொள்ளும் நிலையில் நின்றுகொண்டு வீம்பு பேசுவது, அறிவும் அறியாமையும் மனிதனிடத்தில் இரண்டறக் கலந்து நிற்கின்றன என்ற உண்மையையே புலப்படுத்துகின்றன.

உலக மக்களின் ஒருமித்த வேண்டுகோளையும் எச்சரிக்கையையும் புறக்கணித்து விட்டு பிரிட்டன் செய்திருக்கும் 'நியூகிலியர் வெடிப் பரிசோதனைகள்' இருண்ட எதிர்காலத்தையே நமக்கு நினைப்பூட்டுகின்றன. பிரிட்டனின் இப்போக்கு சரியா தவறா என்பதை ஆராயு முன் இரு உண்மைகளை நாம் மறந்துவிடக்கூடாது. ஒன்று தர்ம நியாயப் பிரச்சினை; மற்றொன்று அரசியல் பிரச்சினை. முதல் விஷயத்தைப் பொறுத்த மட்டில், மனித நல்வாழ்வுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய ஒரு பயங்கரப் பரிசோதனையை, அதனால் பாதிக்கப்படுவோர் எச்சரித்தும், அபயக் குரல் எழுப்பியும் அதை அலட்சியம் செய்த பிரிட்டனின் போக்கு வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. ஆனால் இதிலுள்ள அரசியல் பிரச்சினையையும் யாரும் புறக்கணித்துவிட முடியாது. இன்று அணுசக்தி வல்லரசுகள்—அதாவது அணுசக்தி ஆயுதங்களைக் கொண்டிருக்கும் வல்லரசுகள் இரண்டு. ஒன்று அமெரிக்கா; மற்றொன்று ரஷ்யா. அணு ரகசியத்தை அறிந்து கொண்டு, ஆராய்ச்சிகள் செய்து அணுசக்தி வல்லரசாகிக் கொண்டிருக்கும் மூன்றாவது நாடு பிரிட்டன். இரண்டு வல்லரசுகள் அணுப்பரிசோதனைகள் செய்து வெற்றி கண்டு கணிசமான அளவுக்கு அணுவாயுதங்களையும் சேர்த்துக் கொண்டபின், அத்துறையில் முயலும் மூன்றாவது நாடான பிரிட்டனை மட்டும் அப்பரிசோதனைகளைச் செய்யக் கூடாது — என்று வேண்டிக் கொள்ளுவதும் எதிர்பார்ப்பதும் எப்படி நியாயவாதத்திற்குப் பொருந்தும்? பிரிட்டன் அதற்கு ஒப்புமானால், ஆயுத பலகீனம் ஏற்பட்டு அது வல்லரசு நிலையை இழக்க வேண்டி வரும் என்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் பார்லிமெண்டில் குறிப்பிட்டிருப்பது எவரும் மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும்.

தவிர, மூன்றாவது உலகப் போர் ஏற்படுமானால் அது அணு ஆயுதப் போராகத்தான் இருக்க முடியும். அந்தப் போரின் முழுக் கொடுமையையும் பிரிட்டனே தாங்க வேண்டி இருக்கும் என்பதையும் மறப்பதற்கில்லை. ஆனால் நாம் கண்டிக்கக் கூடிய தெல்லாம் இந்தப் பரிசோதனைகளை பிரிட்டன் ஏன் ஆசியப் பிரதேசங்களில் செய்ய வேண்டும் என்பதுதான். அமெரிக்கா பசிபிக் சமுத்திரத்திலும், ரஷ்யா சைபீரியாவிலும் இந்தப் பரிசோதனைகளைச் செய்கின்றன. இவைகளும் ஆசியப் பிராந்தியமே! இவ்வளவு ஏன்? முதல் அணுகுண்டுகள் பரீட்சிக்கப்பட்டது ஜப்பானிய நகரங்களான நாகசாகி, ஹிரோஷிமா மீதுதானே? உடல்நூல் ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனைக்கு முயல், தவளை போன்ற பிராணிகளை எடுத்துக் கொள்ளுவதுபோல், ஐரோப்பியரும், அமெரிக்கரும் அணுவாயுதங்களைப் பரிசோதிக்க ஆசிய மக்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் போலும்!

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி செல்வின் லாயிட், பிரிட்டனின் அணுக்குண்டுப் பரிசோதனைகளைக் கண்டிப்பவர்கள் விஞ்ஞானத்தை அறியாதவர்களும் கம்யூனிஸ்ட் அனுதாபிகளும் என்று குறிப்பிட்டார். ஆனால் அணுக்குண்டுப் பரிசோதனைகளைக் கண்டிக்கும் விஞ்ஞானிகளும் மேதைகளும் உண்மையில் மனிதாபிமானிகள்—மக்களினம் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணங் கொண்டவர்கள். அவர்களுக்குக் கம்யூனிஸ்ட் 'லேபில்' ஒட்ட முயற்சிப்பது பிரச்சினையிலிருந்து, கவனத்தைத் திருப்பும் முயற்சியாகும்.

அணுவாயுதங்களைப் பெற்றிருப்பதுதான் பலம், வல்லரசாக நிலைக்கும் வழி என்கின்ற நிலையில், ஒழுக்க அடிப்படையில் தார்மீக நல்லுணர்வோடு அந்த ஆயுதங்களை சம்பந்தப்பட்ட நாடுகள் கடலில் போட்டுவிட வேண்டுமென்று யோசனை கூறுவது ஒரு சமயம் பிரசங்கமாக அமையலாமே தவிர, அரசியல் சிக்கலைத் தீர்க்கப் பயன்படாது. இன்று உலகில் நடக்கும் சிக்கலான கொள்கைப் போராட்டத்திற்கு முடிவு காணும் வரையில் தனிப்பட்ட கொள்கைகளைப் போற்றி வாழும் நாடுகள் பலம்பெறும் முயற்சியில் பயங்கர ஆயுதங்களைப் பரிசோதிப்பதையோ, தயாரிப்பதையோ வெறும் கோரிக்கைகளும் தீர்மானங்களும் தடுத்துவிட முடியாது. பலசாலிதான் வாழ முடியுமென்றால்; பலசாலியாகும் முயற்சியைக் குறைகூறிப் பயனில்லை; பல மற்றவனும் பயமின்றி வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். வாழ வேண்டுமென்ற ஆசை மனித உள்ளுணர்வோடு நின்று இயங்குவது! ஆனால், நம்முடைய பயமெல்லாம் பலம்பெற்று வாழ்வதற்காகச் செய்யப்படும் முயற்சிகள் சர்வநாசத்தை விளைவித்து விடுமோ என்பதுதான்!

இந்த நூற்றாண்டில்—அணு சகாப்தத்தில் வாழுகின்ற மனிதனுக்கு விசேஷமான சில பொறுப்புகள் இருக்கின்றன. பலகோடி ஆண்டுகளாக எண்

✽ 8-ம் பக்கம் பார்க்க

புது வரிகள்
கண்டன நாள்

26-5-57 ஞாயிறன்று நாடெங்கும் எதிர்த்து முரசறைவீர்!

★

26—5—57 ஞாயிற்றுக்கிழமையை, புதியவரிகள் விதிப்பிற்கு நாடெங்கும் கண்டனம் தெரிவிக்கும் நாளாகக் கொண்டு, ஆங்காங்கு அமைதியான முறையில், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தி, மக்களின் எதிர்ப்புக் குரலை தீர்மானங்கள் மூலம் காட்டி, இந்தியப் பேரரசினரும், சென்னை அரசினரும் உணரும்படி ஆவனவெல்லாம் செய்ய முன் வருமாறு தி. மு. கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

- இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர், தி. மு. க.

வெள்ளி 24—5—57 சென்னை

குற்றம் குற்றமே!

ஏழையின் வளைந்த முதுகிலே வரிச்சுமையை ஏற்றி வைத்து விட்டு; தாங்களும் ஏறிச் சவாரி செய்த எந்த அரசாங்கமும் எந்தக் காலத்திலும் அதிக நாள் நீடித்ததில்லை.

—இது தெரிந்திருந்தும் புதிய அனுபவம் பெற்றிடும் பெரு நினைப்பில பண்டிதர் அரசு ஈடுபட்டிருப்பது; இறக்கும் தருவாயில் துடிதுடித்துக்கொண்டிருக்கும் ஏழை நடுத்தர மனிதனுடைய வாழ்க்கையோடு விளையாடுவது உண்மையிலேயே வருந்த வேண்டிய—மனம் நோக வேண்டிய—ஏனளித்தோம் இவர்களுக்கு ஓட்டு என்று பொது மக்கள் கூவிக் கதற வேண்டிய நிலைமையை உண்டாக்கியிருக்கிறது.

நாடெங்கும் ஏழை நடுத்தர வர்க்கத்தினர் குமுறும் எரிமலையாய்; கொந்தளிக்கும் கடலாய் மாறியிருக்கின்றனர்!

முன்பு வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தவர் உப்பு வரியை எதிர்த்து நடத்திய போராட்டத்தின்போது இருந்த எழுச்சியும், ஆர்வமும் இப்போது அதே வெள்ளையன் பாணியில் வரி உயர்வு செய்திருக்கும் இந்த நேரத்திலும் காணப்படுகிறது!

மாற்றுக் கட்சித் தோழர்கள் மட்டுமல்ல; கதர்க் குல்லாய் அணிந்திருக்கும் காந்தி பக்தர்களும்; நேரு பக்தர்களும் கூட மேறு மலையைத் தூக்கி மக்களது தோளில் வைக்காதீர்கள் என்று கூக்குரல் எழுப்புகின்றனர்!

ஒரு முனை; இருமுனைகளிலிருந்து அல்ல; ஏழைகளது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அணுவும் பாதிக்கப்படுகிற வகையிலே; நான்கு பேரிடத்தில் கடன் வாங்கி; பிச்சை யெடுத்து அவர்கள் மூட்டியிருக்கிற வீட்டு அடுப்பிலே தண்ணீர் ஊற்றி அணைத்திடும் விதத்திலே காங்கிரஸ் அரசு சரமாரியாகப் பூட்டிடும் வரிக் கணைகள் அமைந்திருக்கின்றன.

இந்த வரிகளை—ஏழை நடுத்தர வர்க்கத்தினர் முதுகின்மீது கொள்ளிக் கட்டையால், மேலும் கீழும் இடமும் வலமுமாகப் போடப்பட்டிருக்கும் - இந்த அநியாய வரிகளை ஆதரிக்கிறவர்கள் ஒன்று இந்த பட்ஜெட்டினைத் தயாரித்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்; அடுத்தது டி. டி. கே. மந்திரியாவதற்கு உதவி புரிந்த ராமசாமிப் பெரியார்—என்கிற நிலைமை நாட்டிலே உருவாகிவிட்டது.

கொடுமை நிறைந்தது மட்டுமல்ல; சிறிதும் தக்க யோசனையில்லாமலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்தப் பட்ஜெட்.

உதாரணமாக மே மாதம் 15-ம் தேதியன்று பொதுமக்களின்மீது வரிக்குண்டு பொழியும் இந்தப் பட்ஜெட் தயாரிக்கப்பட்டது.

ஆனால் மே மாதம் 18-ம் தேதியன்று—பட்ஜெட் வெளிவந்த மூன்றாவது நாளன்று-நிதியமைச்சர் இந்த வரி விதிப்பிலே இரு மாற்றங்களை அறிவித்தார்.

அதாவது முன்பு—15-ம் தேதியன்று—வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் அச்சுத்தாளின்மீது மூன்று மடங்காக தீர்வை உயர்த்தப்பட்டிருந்ததல்லவா? அந்த உயர்வு பின்னர் இல்லையென்று கூறினார், டி. டி. கே.

அதே போலவே 15-ம் தேதியன்று மண்ணெண்ணெய்மீது தீர்வை 18-75 நயா பைசாவிலிருந்து 20 நயாபைசாவாக உயர்த்தப்பட்டிருந்தது. இந்த உயர்வும் கிடையாது என்று 'கருணை' காட்டினார் நிதியமைச்சர்.

மூன்று நாட்களில் இந்த முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன!

ஆனால் நிதியமைச்சரின் மனதிலே மாற்றங்கள் ஏற்பட்ட இந்த மூன்று நாட்களுக்குள், இந்த உபகண்டத்துப் பொருளாதாரத்திலே எவ்வளவு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன தெரியுமா?

அச்சுத்தாளின் விலை ரீம் ஒன்றிற்கு எட்டணா முதல் ஒரு ரூபாய் வரை உயர்ந்தது; இந்த மூன்று நாட்களுக்குள் இவ்வளவு அதிக விலை கொடுத்துத் தாள் வாங்கும் அனுபவத்தை 'முரசொலி'யே பெற்றிருக்கிறது.

அதேபோலவே மண்ணெண்ணெய் விலையும் உயர்ந்தது. 'பட்ஜெட்' வெளியான அன்று டி. டி. கே. தீர்வை உயர்வினால் மண்ணெண்ணெய் விலை புட்டி ஒன்றிற்கு ஐந்தில் ஒருபங்கு நயாபைசாதான் உயருமென்றும்; அது ஒன்றும் ஏழைகளைப் பாதிக்காது என்றும் அபயம் அளித்தார்.

ஆனால் நடந்தது என்ன?

கிருஷ்ணமாச்சாரியார் எதிர்பார்த்ததைப்போல; — ஆருடம் கணித்ததைப் போல; மண்ணெண்ணெய் விலை பட்டி ஒன்றிற்கு ஐந்தில் ஒரு பங்கு நயாபைசாவா அதிகரித்தது?

இல்லை; இல்லை.

ஒரு புட்டி மண்ணெண்ணெயை முன்பைவிட அரையணா அதிக விலை கொடுத்து வாங்கினார்கள் இருண்ட வீட்டைப் பெற்றிருக்கிற ஏழை எளியவர்கள்!

இந்த மூன்று நாட்களுக்குள் அச்சுத்தாள்; மண்ணெண்ணெய் முதலிய பொருள்களின்மீத தீர்வையை உயர்த்தி நீக்கியதன் காரணமாக—சம்மந்தப்பட்ட பொருள்களை வாங்க வேண்டிய கட்டாயத்திலிருக்கும் அத்தனை பேரும் நேரடியாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்!

அதுபோலவே இந்தத் திடீர் தீர்வை உயர்வு காரணமாக சம்மந்தப்பட்டபொருள்களை விற்கும் அத்தனை வியாபாரிகளும் அதிக விலை பெற்று தங்கள் லாபத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனால் இந்தக் குறுகிய இடைக்காலத்திற்குள் தீர்வை உயர்வு இல்லை என்று கூறினாரே நிதியமைச்சர்; அவர் ஏன் அப்படிச்செய்தார்?

அச்சுத்தாள்மீது தீர்வையை உயர்த்துவதால் நாட்டின் கண் போன்ற பத்திரிகைத் தொழில் அழிந்துவிடும்; மண்ணெண்ணெய்த் தீர்வை உயர்வால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள்; என்ற பெரு நோக்கத்தாலா?

அல்ல, அல்ல.

அப்படிச் செய்திருந்தால்கூட நிதி அமைச்சரது இந்தச் செயலை மன்னித்து விடலாம்.

ஆனால் அவர் **தவறுதலாக** இந்தத் தீர்வை உயர்வை பட்ஜெட்டிலே சேர்த்துவிட்டாராம்!

அது எப்படி பட்ஜெட்டிலே சேர்ந்ததென்பதே அவருக்குத் தெரியவில்லையாம்!

—எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? உச்சி மோந்து கொஞ்சி வளர்த்த குழந்தையைச் சுட்டுக் கொன்று விட்டு; விளையாட்டாகத்தான் கொன்றேன் என்று கூறுவதைப் போல—கட்டித் தழுவிய காதலியின் கழுத்தை நெறித்து விட்டு அவள் எப்படித் செத்தாள் என்றே எனக்குத் தெரிய வில்லை என்று கதை அளப்பதைப் போல—தீர்வையை உயர்த்துவதாக அறிவித்து மூன்று நாட்கள் ஏழைப் பத்திரிகைகளையும்; மண்ணெண்ணெய் உபயோகிக்கும் ஏழைப் பாட்டாளிகளையும் பாழ்படுத்தி; அவர்களது வருமானத்தை வீணடித்துவிட்டு; அதே நேரத்தில் அந்த மூன்று நாட்களும் அச்சுத்தாள்—மண்ணெண்ணெய் வியாபாரிகளது பணப்பையை பெருக்க வைத்துவிட்டு காரணம் கூறுகிறார், நிதி அமைச்சர் தவறுதல் நேர்ந்து விட்டதென்று!

தவறுதல் நேரக்கூடிய; நேர்ந்தாலும் அனுமதிக்கக்கூடிய திட்டமா பட்ஜெட்?

அல்ல; அல்ல! கடவுளே நிதி அமைச்சராக இருந்து; பட்ஜெட் தயாரிப்பிலே தவறு செய்து விட்டாலும், நாட்டு மக்கள் நக்கீரர்களாக மாறி 'குற்றம் குற்றமே' என்று கூறுவதோடு மட்டுமின்றி; அதற்கான தண்டனையையும் தந்துவிடும் ஒரே அமைப்பு 'பட்ஜெட்' என்பது!

அந்தப் பட்ஜெட்டிலே தவறு செய்துவிட்டு; அதன் ரகசியங்களை வெளியே தெரியவிட்ட காரணத்துக்காக எத்தனையோ நாடுகளில் எத்தனையோ அமைச்சர்கள் தாங்களாகவே பதவியிலிருந்து விலகியிருக்கிறார்கள்!

அத்தகைய பட்ஜெட்டிலே தவறு நேர்ந்தமைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய கிருஷ்ணமாச்சாரியார் மட்டும் இன்னும் நிதியமைச்சராக இருக்க என்ன தகுதியிருக்கிறது? வேண்டாம்; வேண்டாம்; தவறு நேர்கிற அளவுக்கு ஒரு ஓட்டைப் பட்ஜெட்டைத் தயார் செய்யும் ஒருவர் நமக்கு நிதியமைச்சராக் இருக்க வேண்டாம்!

உதாரணமாக இருக்கவேண்டியோர் உதாசீனம் செய்கிறார்கள்!

நகைகளைக் கழற்றிக் கொடுங்கள்!

வளையல்களைத் தாருங்கள்!

தாலியையும் தந்து விடுங்கள்!

தோடு, தொங்கட்டானையும் கொடுங்கள்!

—கூறினார்கள் அமைச்சர் பெருமக்கள்!

ஏனென்று கேட்டதற்கு நாட்டு முன்னேற்றத்தையும்; ஐந்தாண்டுத் திட்டத்தையும் காரணம் காட்டினார்கள்!

தாலியைத் தரும்படிக் கேட்ட அதே நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்தான் இன்று ஏழைத் தாய்மார்களின் தாலியறுக்கும் விதத்திலே வரிகளை உயர்த்தியிருக்கிறார்!

முன்பு ஒருவர் இரண்டு பவுண்டு காப்பி வாங்கினால் இப்போது அவர் ஒரு பவுண்டுதான் காப்பி வாங்க முடியும்!

முன்பு பதினைந்து கெஜம் துணி உபயோகித்தவர் இப்போது பத்து கெஜம் துணியைத்தான் பெற முடியும்!

முன்பு பத்து தீப்பெட்டிகள் வாங்கினால் இப்போது அந்த நபர் ஐந்து தீப்பெட்டிகளைத்தான் வாங்க முடியும்!

ஏழை எளியவரின் வயிற்றிலே அடித்திருக்கிறது இந்தப் புதிய வரிகள்!

முன்னைப்போல அவன் உறவினரைச் சந்திப்பதற்கு; எங்கோ இருக்கும் தனது சொந்தக்காரர்கள் வீட்டுத்திருமணத்திலே கலந்து கொள்வதற்கோ; அல்லது நெடுந்தூரத்தில் இருக்கும் நெருங்கிய உறவினர்—தந்தையோ, தாயோ, மனைவியோ குழந்தையோ-செத்துவிட்டால் அங்கு சென்று திரும்பி வருவதற்கு அவன் அதிகமான ரயில்வே கட்டணம் மட்டுமல்ல. பிரயாணவரியும்கொடுத்தாக வேண்டும்!

தபால் தந்திக் கட்டணங்கள் உயர்ந்துவிட்டன!

இனிமேல் அவன் அடிக்கடி அஞ்சலட்டையைப் பயன்படுத்த முடியாது. ஏதோ ஒரு ஆடம்பரப் பொருளை உபயோகிப்பதைப் போலவே நினைத்துத்தான் இனி அவன் அதிக விலை கொடுத்து கார்டு வாங்கி எழுத வேண்டும்!

இவ்வளவும் எதற்காகச் செய்யப்படுகின்றன?

ஏழை எளியவரை ஏன் இப்படி மேலும் மேலும் அதிகமாகச் சுரண்டுகிறார்கள்?

உபயோகமற்றுத் திரிகிறார்கள்!

❋❋❋ எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக என்று பதிலிறுக்கிறார்கள்! 1961-ம் ஆண்டில் வரப்போகும் 'இந்தியா'வுக்காக 1957-ம் ஆண்டு 'இந்தியா' செய்யும் தியாகம் தான் இந்த வரிச்சுமையை ஏற்றுக் கொள்வது என்றும் பகிரங்கமாகப் பேசுகிறார்கள்!

—இப்போதுதான் இவர்களுக்கு வாய் வருகிறது ஐந்தாண்டுத் திட்டமென்பது இந்த நாட்டு வளர்ச்சிக்காக; மக்களது வாழ்க்கைத்தர உயர்ச்சிக்காக **அரசாங்கம்** செய்கிற முயற்சி என்பது.

ஆனால் தேர்தல் காலத்தில் இவர்கள் பேசிய பேச்சு என்ன? எழுதிய எழுத்துக்கள் யாவை?

❋❋ "காங்கிரஸ்தான் ஐந்தாண்டுத் திட்டம்; ஐந்தாண்டுத் திட்டம்தான் காங்கிரஸ்!"

—முழங்கினார்கள், காந்திக் குல்லாய் தரித்த காங்கிரஸ் வீரர்கள்!

ஏதோ ஐந்தாண்டுத் திட்டம் என்பது காங்கிரஸ் கட்சியே நிதி திரட்டி; இந்தியாவின் நன்மைக்காக; இந்தியரின் நன்மைக்காக பெரு நோக்கோடு செலவு செய்வதாகப் போக்கு காட்டினார்கள்!

ஒவ்வொரு தேசிய ஏடும் சுட்டிக் காட்டிற்று—ஐந்தாண்டுத் திட்டத்திற்காகக் காங்கிரசுக்கு ஓட்டளியுங்கள்—என்று!

❋❋ இப்போது என்ன தெளிவாகிறது? ஐந்தாண்டுத் திட்டமென்பது காங்கிரசின் திட்டமா? அல்ல; காங்கிர தனது செல்வாக்கினை வளர்த்துக் கொள்வதற்குக் கருவியாகக் கையாண்ட சூதுத் திட்டம் தான் அது என்பதைப் பொது மக்கள் அனைவரும் இப்போது உணர்வதற்குத் தலைப்பட்டு விட்டார்கள்!

❋❋ ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் அது காங்கிரஸ் ஒன்றினால்தான் முடியுமென்றார்களே; அவர்கள் ஏன் இப்போது தங்கள் சுருதியைக் குறைத்துக்கொண்டு; ராகத்தை மாற்றிக்கொண்டு ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி என்பது ஒவ்வொரு இந்தியனின் வெற்றி என்று கதையளக்கிறார்கள்?

❋❋ கட்சியின் திட்டமென்கிற ரீதியிலே பேசியவர்கள்; எழுதியவர்கள்; படமெடுத்துக் காட்டியவர்கள் இப்போதுமட்டும் அதற்கு ஏன் 'மக்கள் திட்டம்' என்று வர்ணம் பூசுகிறார்கள்?

❋❋❋ சரி; பொது மக்கள் ஒவ்வொருவரும் தியாகம் செய்ய வேண்டும்; சிக்கனமாய் வாழ்க்கை நடத்துவதற்குத் தயாராய் இருக்க வேண்டுமென்றுத் தம்பட்டமடிக்கிறார்களே; இவர்கள் தங்களது அரசாங்கச் செலவினங்களிலே எதிலாவது ஒன்றில் சிக்கனமாய் இருந்து மற்றவர்களுக்கு வழி காட்டியிருக்கிறார்களா?

இல்லை!

❋❋❋❋ உதாரணமாக 1947-ம் ஆண்டில் ஆறு கோடி ரூபாய் செலவில் எட்டு கோடி கெஜம் துணிக்கு ஆர்டர் கொடுத்திருந்தது, இந்திய அரசு!

❋❋ அந்தத் துணியை அப்படியே தருவித்து; இந்தியாவில் விற்றுவிட வேண்டுமென்பது அதன் நோக்கம்! ஆனால் துணிகள் இந்தியாவில் இறக்குமதியானதே; அவைகளை விற்க முடிந்ததா?

இல்லை!

❋❋ ஏனெனில் அந்தத் துணிகளின் அதிக விலை காரணமாக

❋ தொடர்ச்சி 9-ம் பக்கம்

பிரகாசம் மறைந்தது!

உடல்—பொருள்—ஆவி, மாடு—மனை—மக்கள்—சுற்றம்; வீடு—சுகம் என்பார்களே. இவை அனைத்தையும் நாட்டுக்காக ஈந்து ஆந்திரச் சீமையில் ஒப்புவமை இன்றி விளங்கிய பிரகாசம் பிரிந்து விட்டார். விடுதலை வெறி கொண்டு ஓடிய அவரது இரத்த ஓட்டம் நின்று விட்டது. நாட்டுக்காக வாழ்ந்த அவரது மூச்சு நின்று விட்டது!

வெள்ளை வெறியர்களின் துப்பாக்கிகளும், பீரங்கிகளும் சூழ்ந்திருந்த வேளை, சைமன் கமிஷனை எதிர்த்து; ஆர்ப்பாட்டம் நடத்திட மற்றவர் அனைவரும் தயங்கி நின்ற வேளையில்; துணிந்து வந்து துப்பாக்கி முனைக்கெதிரே தன் மார்பைத் திறந்து காட்டி; "என்னைச் சுடு" என்று கொக்கரித்த வீரமிக்க வாய் மூடி விட்டது!

அமைச்சர் பதவியும், 'கன'மாகலாம் என்ற ஆசையும் அலை மோதிட இன்று ஆயிரக்கணக்கானவர் கூடியிருக்கும் காங்கிரஸ் மண்டபத்திற்கு தியாகத்தால் அஸ்திவார மிட்டவர் திரு. பிரகாசம்!

உயிர் வாழ்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தாரேயானால் அவர் ஒரு சிறந்த வக்கீலாகவே பெயர் பெற்று பணமும் சேர்த்திருக்க முடியும். நாட்டுப் பற்று அவரை இவற்றையெல்லாம் இழக்கச் செய்தது.

இறுதிக் காலத்தில் அவரது செயல்கள் முழுவதையும் ஆதரிக்க முடியாவிடினும் அவரது தியாகத்தை எவராலும் மறக்க முடியாது.

ஆந்திரத்திற்கு அவர் ஒருவரே தலைவராகவும்; பிரதிநிதியாகவும் இருந்தார். ஆவிநிகர் அன்பரைப் பிரிந்து வாழும் தெலுக்குத் தோழர்கள் அனைவருக்கும் எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்! மாபெரும் விடுதலை வீரரை வழங்கிய அவரது குடும்பத்தைப் பாராட்டி நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறோம்!

★ வியாபாரம் ★

ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்லிவிட்டுத்தான், நான் இப்போது நடக்கும் ஒரு திருமணத்தைப்பற்றி உங்களிடம் விமர்சிக்க வேண்டும்!

★

புது வருட தினம், எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் தன் குழந்தையின் பிறந்த தினத்தையொட்டி விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். குழந்தைகள் குதூகலமாயிருக்க அவ்விழா நடத்தப்பட்டாலும் அங்கு வந்திருந்தவர்கள் அநேகமாக பெரிய மனிதர்கள்தான். தனித்தனியாக ஒதுங்கி நின்று அவரவர்களுக்குப் பிடித்தமான விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர். நான் எதிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே நின்று கொண்டிருந்தேன். காரணம், அங்கு எனக்கு யாரையும் தெரியாது. மேலும் கூட்டமென்றாலே எனக்குக் கூச்சம்! அப்படித் தனியாக நின்றிருந்ததும் எனக்கு இன்னொரு விதத்தில் சௌகரியமாக இருந்தது. எல்லோரையும் தனித் தனியாக கவனித்துக் கொண்டிருந்தேன்; விசித்திரமான நடவடிக்கைகளைக் கொண்ட பல நபர்களை இம்மாதிரி விழாவில் சந்திக்கலாமல்லவா?

என்னைப் போலவே இன்னொரு நபரும் நண்பர்கள் இல்லாமல் தடுமாறிக்கொண்டிருந்ததை நான் கவனித்தேன்; விருந்து கொடுக்கும் பெரிய மனிதருக்கு, வேறொரு வெளியூர் நண்பர் மூலம் அறிமுகம் செய்யப்பட்டவர் இவர். அதனால் அங்கு யாரையும் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிந்த ஒரே நண்பரோ வந்தவர்களை கவனிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அதனால் அவர் ஒதுங்கியே இருந்தார். அவர் பெயரை நான் சொல்லாததற்கு முக்கிய காரணம் எதுவும் இல்லை - எனக்கே அது தெரியாது; அவ்வளவுதான்! வாட்டசாட்டமாக இருந்த அவர் உருவம் யாரையும் எளிதில் கவரக் கூடியது. நன்கு முறுக்கிவிடப்பட்ட மீசை அவருடைய முகத்திற்கே தனி சோபை தந்தது. ஓரிடத்தில் அமர்ந்து தனது மீசையை தடவிக் கொடுத்தபடி இருந்தார். "உங்களில் யாராவது இம்மாதிரி மீசையை வளர்க்க முடியுமா?" என்று மற்றவர்களை அவர் கேட்பது போலிருந்தது. அவர் உட்கார்ந்திருந்த கோலம்...பார்த்த பார்வை! உண்மையில் அது பெருமைப்படக் கூடிய விஷயந்தானே!

இவரைத் தவிர எனக்கு வேறொரு நபரையும் கவனிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் பெயர் யூலியன் மஸ்டகோவிச் என்பதை பின்னால் தெரிந்து கொண்டேன். விருந்தளிக்கும் நண்பரும், அவரது மனைவியும் யூலியனை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். அவர்கள் அளவுக்கு மீறிய வகையில் உபசரிப்பதைப் பார்ப்பவர்கள், யூலியனைப் பெரிய மனிதன் என்றோ; இல்லை விருந்தளிப்பவருக்கு மிகவும் வேண்டியவர் என்றோதான் நினைப்பார்கள். இவ்விழாவை நடத்த தான் பட்ட சிரமம் எவ்வளவு என்பதை விருந்தளித்த நண்பர் அடிக்கடி யூலியனிடம் சொல்லிக் கொண்டிருந்தார், மிகவும் பெருமையோடு. தனக்களிக்கப்படும் மரியாதையை ஏற்றுக் கொண்ட யூலியன், சொல்வதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தார். மற்றவர்கள் தன்னை கவனிக்கிறார்கள் என்று தெரிந்தால் சிலர் உடம்பை வீணாக அலட்டிக் கொள்வதில்லையா! அதைப் போல் யூலியனும் நடிக்க ஆரம்பிக்கவே, நான் அங்கிருந்து நகர்ந்தேன் அடுத்த அறைக்கு.

அங்கே குழந்தைகள் தங்கள் இஷ்டம்போல் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் உள்ளே நுழைந்ததும் ஒரு சிறுவன் என்னைத் தனது பொம்மைத் துப்பாக்கியால் சுட முயற்சித்தான். அவனது தோற்றம் என் மனதைக் கவர்ந்தது. அலை அலையாகக் கிடந்த தலைமயிர், கபடில்லாத அழகு முகம், குறுகுறுத்த பார்வை...பையன் அழகாக இருந்தான். அவனை விட எனக்கு அவன் சகோதரியை அதிகம் பிடித்திருந்தது. அவளுக்கு வயது பதினொன்று இருக்கலாம். தன்னுடைய கண்களை ஒரு முறை சுழற்றினால் போதும்; யாவரும் தனக்கு அடிமையாகி விடுவர் என்று அவளுக்குத் தெரிகிற வயதில்லை. என்னைப் போலவே பல நண்பர்கள் அப்பெண்ணின் அழகை வியந்து விமர்சித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் சொன்னார்:

"இப்பெண்ணின் தந்தை ஒரு பிரபல காண்ட்ராக்டர். இப்போதே இவளது திருமண செலவுக்காகவும், மாப்பிள்ளைக்குக் கொடுப்பதற்காகவும் முப்பதாயிரம் ரூபிள்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்," என்று.

வெகு அருகில் நின்று கொண்டு இதை யூலியன் மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பதை நான் அறிந்தேன். அப்போது நான் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

வீட்டுக்காரர் எல்லா குழந்தைகளுக்கும் பரிசளித்தார். எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துவிட்ட அப்பெண்ணுக்கு மட்டும் கொஞ்சம்விலையுயர்ந்த பரிசு கிடைத்தது. விலை மிகவும் குறைந்த பரிசு வாங்கியவன் விருந்தளித்த நண்பரின் வீட்டைப் பார்த்துக் கொள்ளும் காரியஸ்தியின் மகன். அவனுக்குக் கொடுக்கப்பட்டது ஒரு புத்தகம். அதை அவனால் படித்துப் புரிந்து கொள்ள முடியுமா என்று யாரும் கவலைப்படவில்லை!

பரிசளிப்பு முடிந்ததும் குழந்தைகள் மீண்டும் விளையாடப் போய் விட்டார்கள். காரியஸ்தியின் மகனுக்கு விலை யுயர்ந்த பரிசுகளைத் தொட்டுப் பார்க்க வேண்டும்; அவைகளை வைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்ற ஆசை! அது அவன் முகத்தில் தேங்கிக் கிடந்தது. தனது அந்தஸ்து பேதத்தை உதறிவிட்டு மற்றவர்களுடன் விளையாடப் புகுந்தான். ஆனால் ஒரு பணக்காரச் சிறுவன், அவனை அருகில் சேர்க்காமல் அடித்தான். அடிபட்டவன் அழ வேண்டுமே; மூச்சு விடவில்லை! தூரத்திலிருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்த காரியஸ்தி அருகில் வந்து தன் மகனை "இவர்களோடு விளையாட வேண்டாம். உள்ளே போ!" என்றாள்.

அவன் கேட்பானா? தனியாக அமர்ந்து, தனது விலையுயர்ந்த பொம்மைக்கு அலங்காரம் செய்து விளையாடிக் கொண்டிருந்த பதினோரு வயதுச் சிறுமியிடம் வந்தான். அவள் அவனை தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். பையன் திருப்தியோடு விளையாடினான். இருவர் முகத்திலும் மகிழ்ச்சிக் களை! கள்ளமில்லாத இரு உள்ளங்கள் இணைந்து விட்டது போன்ற பிரமை எனக்கு! அரைமணி நேரம் கழிந்திருக்கும்.

குழந்தைகளும் நானும் இருந்த அறைக்கு யூலியன் வந்தார். அவரது நடத்தையில் பரபரப்பு காணப்பட்டது. இந்த நேரத்தில் குழந்தைகளிடையே ஒரு சிறு குழப்பம். அதில் கலந்து கொண்டு சமரசம் செய்வார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவருடைய வாய் எதையோ முணு முணுத்துக் கொண்டிருந்தது. பரபரப்பும்...... அந்த முணு முணுப்பும் ஏன்? சண்டையா? மனக் கலக்கமா? எதுவென்று எனக்குத் தெரியவில்லை. வந்த வேகத்தில் அவர் வெளியேறவும் முயற்சித்தார் போலிருக்கிறது. அதற்குள் அவரது கண்கள், ஒரு பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த பதினோரு வயதுச் சிறுமியையும் காரியஸ்தியின் மகனையும் பார்த்து விட்டன. அவர்கள் இருந்த இடத்திற்கு வந்தார்.

"என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்?" என்றார் யூலியன் அன்போடு.

"விளையாடுகிறோம்!"

"இந்தப் பயலோடா?... நீ இங்கிருந்து அடுத்த அறைக்குப் போய் மற்ற குழந்தைகளுடன் விளையாடம்மா!" என்றார். காரியஸ்தியின் மகன் ஒன்றும் பேசாமல் அவரைப் பரிதாபமாகப் பார்த்தான். நான் அறையின் ஒரு மூலையில் 'பூ'த் தொட்டிகளுக்குப் பின்னால் அமர்ந்திருந்தது யூலியனுக்குத் தெரிந்திருக்காது. எதற்கும் ஜாக்கிரதையாக ஒரு தடவை அவர் தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டார். இது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தொடர்ந்து அவரைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

"என்ன, பொம்மையோடு விளையாடுகிறாயா?"

"ஆமாம்!"

"இந்த பொம்மை எதனால் செய்யப் பட்டது தெரியுமா?" என்றார்.

"எனக்குத் தெரியாது..." —சிறுமி தயங்கியபடி பதில் சொன்னாள்.

"கந்தைத் துணிகளால் செய்யப் பட்டது..." என்று கூறிவிட்டு அருகில் இருந்த பையனைப் பார்த்து, "உன் மாதிரி குழந்தைகளிடம் போய் விளையாடு; போ!" என்றார்.

இதைக் கேட்டவுடன் பை

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்

ரஷ்ய மூலம்:
டாஸ்டாவ்ஸ்கி

தமிழில்:
"சாமி"

பள்ளியறை ஒப்பாரி-பாராள்வோர் போடும் வரி!

மு. கருணாநிதி

[20—5—57 அன்று, அயோத்தியா பட்டணத்தில், எற்காடு தொகுதி, சென்னை சட்டசபை துணைத் தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர் தோழர் சின்னக் கவுண்டர் அவர்களை ஆதரித்து ஆசிரியர் மு. க. அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.]

இன்றைய தினம் சட்டசபைக் கூடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் 15 பேர் அமர்ந்திருக்கிறோம். காங்கிரசின் சார்பிலே 150 பேர் அமர்ந்திருக்கிறார்கள் நாங்கள் தொகையிலே மிக மிகக் குறைவு; அவர்களோ மிக மிக அதிகம்! அவர்கள் 150, நாங்கள் 15! இந்த 15-க்குப் பிறகு போடப்பட்டிருக்கிற பூஜ்யம்—ஒரு சைபர் அவர்களை 150-ஆக ஆக்கியிருக்கிறது எப்போதுமே அந்த பூஜ்யம் இருக்கிறதே, அது இன்னொரு எண்ணோடு சேரும் போதுதான் நல்ல மதிப்பைப் பெறுகிறது. அதைப் போலவே அந்த பூஜ்யம் இப்போது காங்கிரசுடைய பதினைந்தோடு சேர்ந்திருக்கிறது; 150-ஆக ஆகியிருக்கிறது. அந்த பூஜ்யத்தை நீங்கள் நன்றாக உற்று நோக்க வேண்டுகிறேன். வட்ட வடிவமாக இருக்கும்; உருளக்கூடிய ஆற்றல் வாய்ந்தது; உருளக்கூடிய நிலை படைத்த வெள்ளிப் பணங்கள் கூட அங்கும் உருளும்; இங்கும் உருளும் — "உருண்டோடும் பணங்காசுகள்" எனப் பாடல் கேட்டிருக்கிறோம்; அதுபோல! ஆகவே, உருளக்கூடிய ஆற்றல் பெற்ற அந்த சைபர் (0) அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பக்கம் உருண்டு வந்து, இந்தப் பதினைந்துக்குப் பின்னால்கூட ஒட்டிக் கொள்ளலாம். ஆகவே அந்த முறையிலே 15-ஆக இருக்கிற நாம், அடுத்த தடவை 150-ஆகக் கூட மாறலாம்; இன்றைய தினம் காமராசர் வீற்றிருக்கிற இடத்திலே, நாளை அறிஞர் அண்ணா அவர்கள் அமரலாம். ஆனால் காமராசர் வீற்றிருக்கிற நேரத்திலே காமராசருடைய 'லகான்' நேருவினுடைய கையிலே இருக்கும். ஆனால் அண்ணா வீற்றிருக்கிற நேரத்திலே, தென்னகம் எடுப்பார் கைப்பிள்ளையாகவோ—ஜண்டு நிலையிலோ இருக்காது!

• திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 15 பேர்தான் வீற்றிருக்கிறோம்; ஆகவே சின்னக் கவுண்டரையும் எங்களோடு அனுப்பி வையுங்கள் என்று மாத்திரம் கேட்க நாங்கள் இங்கு வரவில்லை. பதினைந்து, 16-ஆக மாறுகிற காரணத்தால் ஏதோ சட்டசபையிலே பெரியதொரு புரட்சி ஏற்பட்டு விடும் என்றும் நான் வாய்ச் சவடால் கூற விரும்பவில்லை. அதுபோல் 150 ஆக இருக்கிற காங்கிரசிலே 151—ஆக இன்னொரு தோழர் வந்து அமர்ந்துவிட்டால், அதனால் பெரியதொரு புதிய மாறுதல் ஏற்பட்டு விடுமென்று காங்கிரஸ்காரர்களும் சொல்ல முடியாது. பதினைந்து 16-ஆக ஆகிவிட்டால், நாங்கள் காமராசருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிடுவோம் என்று உறுதி சொல்ல நாங்கள் தயாராக இல்லை. அத்தகைய அரசியல் தெளிவு உணராதவர்கள் அல்ல. அதைப்போல 150, 151 ஆக ஆனால்தான் காமராஜருடைய ஆட்சி நிலைக்கும் என்கிற நிலை அவர்கட்கும் இல்லை. ஏனென்றால் அவர்கள் இப்போது பரிபூரண 'மெஜாரிடி' படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இங்கிருந்து அனுப்பப்படுகிற அந்த ஒருவர்—ஒரு சட்டமன்ற உறுப்பினர்—அங்கே செல்லுகிற காரணத்தால், சட்ட மன்றத்திலே எந்தத் தரப்பிலும் அதிசயிக்கத்தக்க புதிய மாறுதல் ஏற்பட்டு விடப் போவதில்லை.

எனக்கு முன் பேசிய தோழர்களெல்லாம் குறிப்பிட்டார்கள், இரண்டு மூன்று நாட்களாக இந்த நாட்டு மக்களுடைய நாவிலெல்லாம் அடிபடுகின்ற ஒரு மிக மிக முக்கியமான பிரச்னை என்ன என்று. ஆட்சிபீடத்திலே அமர்ந்திருக்கிற சர்க்கார்-மத்ய சர்க்கார்—பொது மக்களுடைய வோட்டுகளைப் பெற்று டெல்லியிலே அமர்ந்திருக்கிற சர்க்கார் இன்றைய தினம் மக்கள்மீது தாங்க முடியாத வரிச் சுமைகளை ஏற்றியிருக்கிறார்கள். அன்றாடத் தேவைக்குள்ள பொருள்கள் அத்தனைமீதும் வரிபோடப்பட்டிருக்கிறது. நல்லெண்ணெய்க்கு வரி; தேங்காய் எண்ணெய்க்கு வரி; சர்க்கரைக்கு வரி; தேயிலைக்கு வரி; புகையிலைக்கு, காப்பிக்கு, தீப்பெட்டிக்கு வரி—இப்படி வரி இல்லாத பொருள் எதுவுமே யில்லை என்கின்ற அளவுக்கு வரி, வரி, வரி என்று அத்தனை வரிகள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு வரிகளையும் இவர்கள் போட்டிருக்கிறார்களே, நாங்கள் வரிபோடப் போகிறோம் என்று தேர்தலுக்கு முன் ஒரு வரி எழுதினார்களா? ஒரு வார்த்தை சொன்னார்களா? நாங்களெல்லாம் மந்திரிகள் ஆகிவிட்டால், நாங்கள் பாராளுமன்றத்திற்கு சென்றால், நாங்கள் சட்டசபைக்குப் போனால், காங்கிரஸ்காரர்களே மீண்டும் இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுவதற்கு ஆரம்பித்தால், நாங்கள் போனதும் போகாததுமாக உங்கள்மீது இவ்வளவு வரிகளைப் போடுவோம்; அதற்கு சம்மதமானால் எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று எந்த யோக்கியனாவது உங்களிடத்திலே கேட்டதுண்டா? கேட்கவில்லை. என்ன சொன்னார்கள்? நாங்கள் போனால் இருக்கிற வரிகளையெல்லாம் எடுத்துவிடுவோம்; நாங்கள் போனால் நாட்டு மக்களுடைய நலத்தைத் தவிர வேறு எதையும் கவனிக்க மாட்டோம் என்று வாக்குறுதி தந்தார்கள். வாக்குறுதி தந்தவர்கள் அதைக் காப்பாற்றினார்களா? உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்—பெண் கேட்க வருகிற மாப்பிள்ளை மாமனாரிடத்திலும், மாமியாரிடத்திலும் "உங்களுடைய பெண்ணை எனக்குத் தருவீர்களேயானால், நான் அதைக் கண்ணைப்போல் காப்பேன்: பொன்னைப் போல் போற்றுவேன்; அவளுக்கு நல்ல நகைகளை எல்லாம் வாங்கித் தருவேன்; அழகான வைரத்தோடு போடுவேன்; மூக்குத்தி, பத்து பவுனிலே மாணிக்க கெண்டைச்சரம், முத்தாரம், காலுக்கு சிங்காரக் கொலுசு, ஒட்டியாணம்—இவ்வளவும் போடுவேன். ஆகவே உங்களுடைய பெண்ணை எனக்குத் தாருங்கள்!" என்று சொல்லி, பெண்ணைக் கட்டிக் கொண்டு போய் விடுகிறான். சிறிது நாள் சென்றதும் தன் பெண் எப்படி இருக்கிறாள் என்று அறிவதற்காகப் பெற்றோர் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று பார்க்க விரும்புகிறார்கள். இரவு பத்து மணி—பள்ளி யறையிலே பெண்ணும், பிள்ளையும் இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டு, மகிழும் போது 'ஐயோ! ஐயோ!' என்ற அலறல் பள்ளியறையிலிருந்து கேட்க, என்னவென்று பார்க்க, திடீரென்று கதவை உடைத்துக்கொண்டு அந்தப் பெண் வெளியே வந்து விழுகிறாள். "என்னம்மா?" என்று கேட்டால், "ஐயோ, என்னை அடிக்கிற அடி தாங்கவில்லை! பாருங்கள், இதோ காயம்; அதோ காயம் என்று சொல்ல, சொல்லும் போதே ஒரு பல்லும் கீழே விழ, "என்னடா பாவி, நகை போடுகிறேன் என்று சொன்னாயே, இதுவா நகை?" என்று பெற்றோர் கதற—"ஆமாம்; கழுத்திலே போட்டிருக்கிறேனே அதுதான் நகை; கையிலே போட்டிருக்கிறேனே அதுதான் நகை!"-என்று அவளுடைய காயத்தைக் காட்டுகிற மாப்பிள்ளையைப் பார்த்து அந்த மாமனார் என்ன நினைப்பார்! அதைப் போலத்தான் இன்றைய தினம் இந்த காங்கிரஸ் சர்க்கார் 'உங்களுடைய ஓட்டுக்களை எங்களுக்குத் தாருங்கள்; ஆட்சி பீடத்தில் எம்மை அமரச் செய்யுங்கள்! நாங்கள் போனவுடனே உங்களை எப்படி வாழ விக்கிறோம் பாருங்கள்'—என்று சொல்லி நம்மிடத்திலே ஓட்டுக்களைப் பெற்றுச் சென்றார்கள். போனவர்கள் என்ன செய்கிறார்கள்? அருமையாக வாழவைப்பேன் என்று அழைத்துச் சென்ற பெண்ணை, அடி அடி என்று அடித்து, உடம்பெல்லாம் காயப்படுத்தி, "என்னப்பா உடம்பெல்லாம் தழும்பு? என்று கேட்டால், "இதுதான் அழியாத நகை, என்றைக்கும், அவள் சாகிற வரையிலும் இந்த நகை அவளுடைய உடம்பில் இருக்கும்!" என்று பதில் சொல்லுகிற மருமகனைப் போல விடை பகருகிறார்கள்! இந்த நிலைமையிலேதான் ஏற்காடு தொகுதியிலே இருக்கிற மக்களுக்கு ஒரு நல்ல சோதனை காலம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. **ஏற்காடு** இந்த வரிகளை **ஏற்காது**— என்கிற அளவிலே, நீங்கள் உங்களுடைய ஓட்டுகளை உதய சூரியன் பெட்டியிலே போடுவதற்கான ஒரு நல்ல தருணம் இப்போது வாய்த்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியாளர் எல்லாப் பொருள்கள் மீதும் வரி போட்டிருக்கிறார்கள். போட்டிருக்கிற "வரிகளால் பணக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்களா? மிக மிகச் சாதாரணமாக ஒன்றிரண்டு பணக்காரர்கள் பாதிக்கப்படலாம்; அதுவும் சரியாக வரி வசூலிக்கும் முறைகள் அமுலாக்கப்பட்டால். மொத்தத்திலே பணக்காரர்களைப் பாதிக்கிற வரி அல்லவே அவை; இந்த நாட்டிலே அன்றாடம் உழைத்து வாழ்கின்ற பாட்டாளிகளை பாதிக்கிற வரிகள்!

காலையிலே எழுந்து, கழனிக்குச் சென்று, இரத்தம் சுண்டச் சுண்ட உழைத்து, வியர்வையைத் தண்ணீராகப் பாய்ச்சி, மணி மணியாக நெல் மணிகளைக் குவிக்கிற விவசாயி, தன்னுடைய களைப்பு தீர்வதற்காக வழியிலே இருக்கிற டீக் கடைக்கு வந்து, "தேத் தண்ணீர் கொடு" என்று ஒ

மாலை போடக் குடலை உருவும் மாபாவிகள்!

★ ★ ★ ★

'குவளை' வாங்கிச் சாப்பிட, இதுவரையிலே அதற்கு ஒரு அணா கொடுத்தானென்றால், இப்போது ஒன்றரையணா கொடுக்க வேண்டும்! அந்த ஒன்றரையணா கொடுத்துவிட்டு வழக்கம்போல பீடி வாங்கிப் பற்ற வைக்கலாம் என்று பீடி வாங்க விரும்பினால், இதுவரையிலே பீடி வாங்க ஒரு அணா கொடுத்தவன் இனிமேல் ஒன்றரையணா, இரண்டணா கொடுக்க வேண்டிய நிலைமை நேருகிறது. அப்படி பீடியைப் பற்ற வைப்பதற்காக தீப்பெட்டி வாங்குகிறான் என்றால், நேற்று வரையில் அரையணா கொடுத்தவன் இன்று முக்காலணா; ஓரணா கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது! இந்த அளவிலே ஏழை மக்களைப் பாதிக்கிற வரிகள்—அவர்களது அன்றாடத் தேவைகளின்மீது விழுந்திருக்கிற வரிகள் பணக்காரர்களையா பாதிக்கும்? ஏழைகளின் வீட்டிலே 'எலக்ட்ரிக்' விளக்கா இருக்கிறது? பணக்காரன் ஆண்டுக்கு ஒரு தீப்பெட்டிதான் வாங்குகிறான். என்றைக்காவது மின்சார விளக்கிலே பழுது ஏற்பட்டு விட்டால் மெழுகு வர்த்தியை ஐந்து நிமிடம் ஏற்றி வைப்பதற்காக ஒரு தீப்பெட்டியை உரைப்பான். ஏழை வீட்டிலோ அப்படி இல்லை. இரவில் ஓட்டைக் குடிசையில் படுத்துத் தூங்குகிற நேரத்தில் ஏதோ ஒன்று தன் மீதோ, தன் மனைவிமீதோ, அருமைச் செல்வத்தின் மீதோ, விழுந்துவிட்டால்—விழுந்தது பாம்பா, தேளா—பூச்சியா, பொட்டா—நட்டுவாக்கிளியா பூரானா—என்று பார்க்க அந்த ஏழை எலக்ட்ரிக் விளக்கை ஏற்ற முடியாது. அவன் வீட்டிலே இருக்கிற எலக்ட்ரிக் விளக்கு எல்லோருக்கும் ஒளி தருகிற சந்திரன்தான்! ஆகவே அவன் உடனடியாகத் தீக்குச்சியைத்தான் கொளுத்தவேண்டும். அந்தத் தீக்குச்சியின் விலை உயருகிறதென்றால், அந்த வரி பணக்காரர்களைப் பாதிக்கிறது என்று பொருள்? இவைகளை எல்லாம் கேட்டால் சர்க்கார் சொல்லுவார்கள்; நாளைய தினம் காங்கிரசின் உப தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகிற நேரத்தில் பேசுவார்கள்; "ஏன் வரி போட்டிருக்கிறோம் என்றால், மக்களுக்கு நன்மை செய்யத்தான்! மக்களின் தேவைக்காகத்தான் போட்டிருக்கிறோம்! வரியைப் போட்டு நாங்களா சாப்பிடப்போகிறோம்? உங்களுக்குத்தானே கொடுக்கப் போகிறோம்?" என்று கூறுவார்கள். அப்படிக் கூறினால், நீங்கள் கேட்காவிட்டாலும் நினைத்துக் கொள்ளுங்கள்; எதிர்த்துக் கேட்காவிட்டாலும் சிந்தித்துப் பாருங்கள்; நாம் கொடுக்கிற வரி எப்படி எப்படிப் பாழாகிறது என்பதை! இந்த வரிகள் எல்லாம் மக்கள் நன்மைக்காக என்று கூறுவதானது; ஒருவன் குடலை உருவி விட்டு அவனுக்கு மாலை போடத்தான் உருவினேன் என்று சமாதானம் கூறுவது போலாகும். வரி போட்டு நாட்டை நலமுடன் நடத்தமுடியும் என்று கூறுகிற சர்க்கார் ஏன் தங்களுடைய தேவைகளைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளக் கூடாது? ஏன் தங்களுடைய சம்பளங்களைக்கொஞ்சம் குறைத்துக்கொள்ளக்கூடாது? என்ன சொன்னார்கள்? வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த நேரத்தில், இந்த காங்கிரஸ் வீரர்கள் மேடையில் ஏறிக் கொண்டு, மேடையதிர-மேடையின் மேல் இருக்கிற மேஜையதிர—மேஜையின் மேல் இருக்கிற சோடா புட்டி அதிரப் பேசினார்களே—வார்த்தைகளை வீசினார்களே. வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டு வெளியேறி விட்டால், கடைசி ஆங்கிலேயன் மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறிவிட்டால், அதன் பிறகு இந்த நாட்டில் 500 ரூபாய்க்குமேல் யாருக்குமே சம்பளம் கிடையாது. ஒரு 'நயா பைசா'க்கூடத் தரமாட்டோம் என்று சொன்னார்களே; 500 ரூபாயா சம்பளம் வாங்குகிறார்கள்? 1500 ரூபாய் இங்கே இருக்கிற மந்திரிக்கு; டெல்லி மந்திரிக்கு 5000 ரூபாய் சம்பளம்! ஒரு மந்திரி எப்படி 1500 ரூபாய் சம்பளமில்லாமல் வசதியோடு வாழ முடியும் என்று கேட்கலாம். பக்கத்திலே இருக்கிற கேரளத்திலே இருக்கிறவர்களும் மந்திரிகள்தான்; தோழர் சங்கர நம்பூதிரி பட்டின் தலைமையிலே அமைந்திருக்கிற சபையும் மந்திரி சபைதான்; அவர்களுக்கு மட்டும் 500 ரூபாய்தான் சம்பளம்; அவர்களும் இந்தப் பொதுத் தேர்தலிலே நின்று வெற்றி பெற்றவர்கள்தான்; அவர்களும் சட்ட மன்றத்திலே அமர்ந்துதான் தங்களது காரியங்களைக் கவனிக்கிறார்கள்; ஆயினும் அவர்கள் வாங்குவது 500 ரூபாய்தான்; ஆனால் உனக்குமட்டும் ஏன் அதைப் போல் மூன்று மடங்கு-1500 ரூபாய்? உனக்கு மட்டும் என்ன மூன்று வாயா, மூன்று வயிறு, மூன்று வீடா இருக்கிறது? பக்தவத்சலம் பிள்ளைக் குட்டிக்காரர்; போனால் போகட்டும்; 1500 தொலையட்டும்—சுப்ரமணியம் போனால் போகிறார்; பெண்டு பிள்ளைக் காரர்; 1500 தொலையட்டும்—மாணிக்கவேலரும் பரவாயில்லை; பிள்ளை குட்டிக்காரர்; 1500 வீணாகட்டும்—இந்தக் காமராசர்கள் தனி ஆள்-ஒண்டிக் கட்டை—பிரம்மச்சாரி—அவருக்கு ஏன் 1500?

இந்த மந்திரிகளுக்குச் காவல் புரிகிறார்களே, போலீஸ்காரர்கள், அவர்களுக்குச் சம்பளம் 30, 40, 49 என்றிருக்கிறதே தவிர, ஐம்பதைக்கூட எட்டிப் பிடிப்பதில்லை! அவர்களது சம்பளத்தை உயர்த்தியது உண்டா? காங்கிரசார் நாடாள வந்த பிறகு போலீஸ்காரர்களுக்கு ஓய்வு ஒழிச்சலே கிடையாதே!

காலையிலே எழுந்திருந்து அழுத்தமான காக்கிச் சட்டைகளை மேலே போட்டுக் கொண்டு—கனமான தொப்பியை தலையிலே வைத்துக்கொண்டு—"இதையும்சுமக்கலாச்சே, ஈசுவரா! போன ஜென்மத்திலே என்ன பாவம் செய்தேனோ" என்று எண்ணிக் கொண்டு—அழுத்தமான துணியை காலில் சுற்றிக் கொண்டு—வெயிலிலே, வீதி ஓரத்திலே, தெரு ஓரத்திலே அலைந்து திரிந்து—இரவு நேரத்திலே வீட்டிற்கு வந்து—ஒரு ஐந்து நிமிடமாவது ஆறுதலாக மனைவியுடன் பேசலாமென்று தன்னுடைய உடுப்புகளையெல்லாம் கழற்றி ஆணியிலே மாட்டி விட்டு—'ஒரு ராத்திரி நிம்மதியாக இருக்கலாம்; எப்போது பொழுது விடியுமோ தெரியவில்லை; விடியாமலே போய்விட்டால்நல்லதல்லவா?' என்றுஎண்ணி-மனைவியினிடத்தில் "அஞ்சுகமே!" என்று கொஞ்சுகிற நேரத்தில்—'படார், படார்' என்று கதவு தட்டப்படும். "யார்?" என்று கேட்க, "ஏய், 704' உன்னை உடனே சப் இன்ஸ்பெக்டர் அவசரமாகக் கூப்பிடுகிறார்" என்று சொல்ல, "ஏன்? ஏதாவது கொலை விழுந்து விட்டதா? கொள்ளை நடந்து விட்டதா?" என்று கேட்க, "கொள்ளையும் நடக்கவில்லை; கொலையும் நடக்கவில்லை; கோவைச் சீமான்—நமது கொங்கு நாட்டு மந்திரி, சுப்பிரமணியம் வருகிறாராம்; அவருக்குப் பாரா கொடுக்க வேண்டுமாம்!" என்று அழைக்க—"அடஏழவே! காலையிலேதானே ஒரு மந்திரி வந்துவிட்டுப் போனார்; மறுபடியும் ஒரு மந்திரியா?" என்று உடுப்புகளை எல்லாம் மாட்டிக் கொண்டு—மந்திரி வருகிற வரையிலே ஆலமரத்தடியிலோ, அரசமரத்தடியிலோ, மதுரை வீரன் மாதிரி சிலையாக நின்று கொண்டிருக்கிற போலீஸ்காரர் ஐம்பது ரூபாய்க்குள்தான் சம்பளம் வாங்குகிறார்

இந்த நாட்டிலே கவர்னர் என்ற 'பதவி' ஒரு இருக்கிறது; சென்னை மாநிலத்தின் கவர்னர் பெயர் ஜான்; அந்த ஜானுக்கு முழ உயரத்திலே சம்பளம்; 10 லட்ச ரூபாய் ஆண்டுக்கு! ஒன்றல்ல; இரண்டல்ல லட்சங்கள்; பத்து லட்சங்கள்! எதற்காக? யாருடைய வியர்வை? யார் கொட்டுகிற இரத்தம்? யார் சிந்துகின்ற கண்ணீர்? எந்தப் பாட்டாளி உழைக்கின்ற உழைப்பு? இதிலே அவருக்கு ஏன் பத்து லட்சம்? யாருடைய பணம்? யார் விட்ட பெருமூச்சு? ஏழைகளுடைய பெருமூச்சல்லவா? பாட்டாளி சிந்துகின்ற கண்ணீரல்லவா? அந்தக் கண்ணீரால் அல்லவா பத்து லட்ச ரூபாயுக்குக் கவர்னருக்கு பன்னீர் தெளிக்கப்படுகிறது ஆண்டு ஒன்றுக்கு! இதைக் கேட்டால் திராவிட முன்னேற்ற கழகத்தார் நாட்டைக் காட்டிக் கொடுக்கிற துரோகிகளா? வடநாடு, தென்னாடு என்று பேசுகிற குறுகிய நோக்கம் படைத்தவர்களா? சர்க்காரை எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லுகிறவர்களா? இதைத்தான் நாங்கள் கேட்கிறோம்; அந்தப் பத்து லட்சத்

✽ 10-ம் பக்கம் பார்க்க

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய—திராவிட முன்னேற்ற கழகத்தின் உயிரோட்டம் உலகறிய

'ஹோம் லண்ட்'

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர் : அண்ணா

2-6-57 முதல் ஞாயிறுதோறும் வார ஏடாக வெளிவருகிறது

டபுள் கிரவுன் 1-4 அளவில் 8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா-ஆண்டு சந்தா ரூ 7.

விவரங்கட்கு :

நிர்வாகி, 'ஹோம்லண்ட்'

95, திருக்கச்சி நம்பித் தெரு : : காஞ்சீபுரம்.

வியாபாரம்

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

யன், சிறுமியின் கைகளைப் பிடித்துக் கொண்டான். அவளும் இவனை விடவில்லை.

இதைக் கவனித்த பூலியன் தன் குரலை இன்னும் கொஞ்சம் குழைவாக்கிக் கொண்டு, "இந்த பொம்மையை உனக்கு ஏன் பரிசாகக் கொடுத்தார்கள் தெரியுமா?" என்றார் சிறுமியிடம்.

"எனக்குத் தெரியாது!"

"இவ்வாரத்தில், நீதான் நல்ல பெண்ணைகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாய்! அதனால்தான் பரிசு," என்றார். இதைக் கூறி முடித்ததும், நான் பூலியனிடம் இன்னும் அதிக மாறுதலைக் கண்டேன். முகத்தின் களையே மாறி விட்டது. சிறுமியிடம் இன்னும் அதிகமாக நெருங்கி,

"உன் அம்மாவையும், அப்பாவையும் பார்க்க நான் உங்கள் வீடடுக்கு வந்தால், நீ என் மீது அன்பு செலுத்துவாயா கண்ணே?" என்றார். வயது வந்த பெண்ணிடம் கொஞ்சுவது போலிருந்தது அவரது நடத்தை! இதோடு விட்டாரா? சிறுமியை அணைத்து முத்தமிட முயன்றார். குறுக்கே பையனல்லவா தடையாக இருக்கிறான்? பெண்ணும் அழும் நிலைக்கு வந்து விட்டாள். இதனல் ஏற்பட்ட ஆத்திரத்தில் பூலியன் காரியஸ்தியின் மகன் மீது எரிந்து விழுந்தார்.

"போ இங்கிருந்து ... இந்த இடத்தில் உன் போன்ற சிறுவர்களுக்கு என்ன வேலை?" என்றார். சிறுமிக்கு கொஞ்சம் தைரியம் வந்து விட்டது.

"அவன் போக வேண்டியதில்லை ... நீங்கள் போனல் போதும்!" என்றாள்.

பூலியனுக்குக் கோபம்பொங்கியது. பையனை அடிக்க கை ஓங்கினர். அறைக்கு வெளியே யாரோ வரும் சப்தம் கேட்டது. அதனல் பையன் பயந்து வெளியே ஓட ஆரம்பிக்க அவரும் வெளியே போனர். அவர் முகம் சிவந்து விகாரமாகஇருந்தது. நானும் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டு அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். வெளியே போய் அதற்கு மேல் ஓட முடியாதவனகிவிட்ட பையன் மீது பூலியன் வசைமாரி பொழிந்தார். பையனே ஒரு மேஜைக் கடியில் பதுங்கிக் கொண்டான். அடி விழாமல் தப்பிக்கலாமல்லவா? அப்போது மட்டும் விடுவாரா பூலியன்? ஒரு கைக்குட்டையை எடுத்து, பையன் முகத்தைக் குறிவைத்து அடித்துக்கொண்டே இருந்தார். பையன் வாயைத் திறக்கவில்லை. ஆனல் பூலியன் சலித்துப் போய் நின்று விட்டார். இந்த அலைச்சலினல் அவருக்கு மூச்சு வாங்கியது

இந்தக் காட்சியைக் கண்ட நான் வாய் விட்டுச் சிரித்து விட்டேன். இந்த நேரத்தில் விருந்தளிக்கும் நண்பர் அந்த இடத்திற்கு வந்து எங்கள்மூவரையும் கவனித்தார்.

உடனே காரியஸ்தியின் மகனை, அவர் பூலியனுக்குக் காட்டி, "இவனைப்பற்றி உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்...ஏதாவது வேலை..."

"வேலை கிடைப்பது மிகவும் சிரமம்—ஒரு வேலைக்கு பல பேர் போட்டி போடுகிருர்கள். நான் கூட வேலையைப் பற்றி விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறேன்...எங்கும் காலி கிடையாது" என்றார். பையனுக்கு உதவி செய்யத் தனக்கு மனமில்லை என்பதை அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை.

"பையன் நல்லவன்!" என்ருர் வீட்டுக்காரர். "கிடக்கிருன் முட்டாள்! இவனைப்பற்றி எனக்குத் தெரியும்!" என்று கூறிவிட்டு பையனை மீண்டும் விரட்டினர். அவன் போய்விட்டான்—பூலியன் வேற்றியோடு என்னைப் பார்த்தார்—அப்போதும் நான் சிரித்து வைத்தேன்!

சற்று நேரத்திற்குப் பிறகு என்னைப்பற்றி பூலியன் அருகில் இருந்தவரிடம் விசாரித்தது எனது காதில் தெளிவாக விழுந்தது. அதற்கும் நான் சிரித்தேன். பூலியன் அங்கிருந்து நகர்ந்தார்.

விழா முடியும் கட்டத்தை அடைந்தது. நான் விடை பெற்றுக் கொள்ளலாம் என்று வரவேற்பு அறைக்குள் நுழைந்தேன். அங்கே எல்லோரும் ஒன்றுகூடி இருந்தார்கள். நடு நாயகமாக பூலியன் அமர்ந்திருந்தார். பதினேரு வயதுச் சிறுமி தன் தாயுடன் ஒரு பக்கமாக நின்றிருந்தாள். அவள் தாயை யாரோ பூலியனுக்கு அறிமுகம் செய்து விட்டார்கள் போலிருந்தது. அதை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு பூலியன், சிறுமியைப் பற்றி அவள் தாயிடம் பிரமாதமாகப் புகழ்ந்து கொண்டிருந்தார். அறையில் நடந்த சம்பவத்தை யார் இங்கு சொல்லப் போகிருர்கள் என்ற தைரியம் வேறு! தாயுக்கும் தந்தைக்கும் மகளைப் பற்றி ஒருவர் புகழ்ந்தால் பிடிக்காமலா போய் விடும்? அவர்கள் இருவரும் இந்தப் புகழ் மாலைகளினல் பூரித்துப் போய் விட்டார்கள். பதிலுக்குப் பேசாமலிருந்தால் நன்ருக இருக்குமா? பெண்ணின் தாய், தகுந்த மாதிரி பதில் சொல்லி விட்டு, ஒரு தடவை பூலியனை தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். அழைப்பை பூலியன்

✻ தொடர்ச்சி 12-ம் பக்கம்

அழிவுப் பாதையில்...

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

ணற்ற மக்களின் உழைப்பாலும் சிந்தனையாலும் உருவாகி வந்திருக்கின்ற நாகரிகம் இன்றைய மனிதனின் அவசர புத்தியால்—பிடிவாத உணர்ச்சியால் அழிந்து போகவிடக் கூடாது! மனித நாகரிகம் மட்டுமல்ல; மனித இனமே அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்! அணுசக்தி, அழிவுப் பாதையிலிருந்து நீங்கி, ஆக்கமான வேலைகளில் முழு மூச்சோடு திருப்பப்படுமானல், மனித வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயம் துவங்கப்படும். அழிவையும் ஆக்கத்தையும் பிரித்துக்காட்டும் கோடு மிக நுண்ணியது. கவனம் சிறிது குறைந்தாலும் விளைவுகள் விபரீதமாகி விடலாம்.

காலஞ்சென்ற அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டதுபோல மனிதனின் மிகப் பெரிய விரோதி பயம்! அணுவாயுதங்களின் தயாரிப்பு பயத்தின் நேரடி விளைவு. பஞ்ச சீல அடிப்படையில் அமைந்த 'இணைந்து வாழும்' கொள்கையை ஒப்புக் கொண்ட நாடுகள் கூட, நடைமுறையில் அதைச் செயல்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஹங்கேரியில் ரஷ்யாவின் தலையீடும், திபேத்தில் சீனவின் பிரவேசமும், சூயஸ் கால்வாய் விஷயத்தில் பிரிட்டனின் போக்கும் ஒரு சில உதாரணங்கள். பொதுவுடைமை பேசும் ரஷ்யாவும், சீனவும், ஜனநாயக வாதம்பேசும் பிரிட்டனும், அமெரிக்காவும் சிறு நாடுகளைப் பொறுத்த மட்டில் ஏகாதிபத்ய உணர்வோடுதான் நடந்து கொள்ளுகின்றன. அது மட்டுமின்றி அவைகளுக்கு இடையே நடக்கும்கொள்கைப் போராட்டத்தில் சிறு நாடுகளின் உரிமையைப் பலியிடவும் தயங்குவதில்லை. பலசாலியின் குரலே கேட்கப்படுகின்ற காரணத்தால், ஒவ்வொரு நாடும் பலம் பெறும் முயற்சியில் மூழ்ந்து நிற்கின்றது; அணுயுகத்தில் அது ஆபத்தான விளைவுகளுக்கு வழி கோலுகிறது.

பின் பிரச்சினை எப்படித் தீர்வது? பெரிய நாடுகள் சிறிய நாடுகளின் உரிமைகளை மதிக்க வேண்டும். பெரிய நாடுகள் ஏகாதிபத்ய ஆசை காலத்திற்கொவ்வாத விஷயம் என்பதை உணர வேண்டும். ஏதோ ஒரு கொள்கை வழிநிற்கும் நாடுகள் இதர நாடுகளிலும் தங்கள் கொள்கை பரவிப் பலம் கிடைக்க ஐந்தாம் படைகளை சிருஷ்டி செய்யக்கூடாது... இப்படியாக அரசியல் வாதிகள் எத்தனையோ நிபந்தனைகளைச் சொல்லலாம்; ஆனல் இவைகள் நிறைவேற ஐக்யநாடுகள் சபை பலம்பெற வேண்டும். ஐ. நா. வின் பலம்பொருந்திய சபையான பாதுகாப்பு கவுன்சிலில் சில வல்லரசுகள் மட்டும் நிரந்தர அங்கத்தினராக இருப்பதும் ரத்து அதிகாரம் பெற்றிருப்பதும் கூடாது. ஐ. நா. வின் பொதுச்சபை சர்வ சக்தியும் வாய்ந்ததாக இருக்கவேண்டும். ஆனல் அச்சபையில் எல்லா நாடுகளும் இடம் பெற வேண்டும்.... கடைசியாக, அணு ஆராய்ச்சிகளைக் கண் காணிப்பது; அழிவுக் கருவிகளைத் தடை செய்வது போன்ற அதிகாரங்களை ஐ.நா. பெற்றிருக்க வேண்டும்!

இதெல்லாம் நடக்குமா? சாத்தியமா? எனக்குத் தெரியாது! மனித இனம் அழியக் கூடாது—வாழ வேண்டும்; இதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம். டாக்டர் இராதாகிருஷ்ணன் குறிப்பிடுவதுபோல் இது வெறும் அரசியல் பிரச்சினை அல்ல; ஒழுக்கப் பிரச்சினை! எல்லோரும் 'ஆம்' என்கிருர்கள்; நடைமுறையில் சிக்கல்கள் தோன்றுகின்றன. சிக்கல்களைத் தீர்ப்பது நமது முதல் கடமை! தீர்க்காவிட்டால்...தீர்க்க முடியாமல் போனல்...சூரியனிடமிருந்து பிரிந்து வந்தபொழுது எப்படி அக்னிக் கோளமாகஇருந்ததோ அப்படியே மீண்டும் எனக்கு உலகம் காட்சியளிக்கிறது!

✻

விரைவில் விற்பனைக்குக் கிடைக்கும்!

உயர்ந்த எண்ணங்கள் குலுங்கும் கருத்துக் கருவூலங்கள்!

மாறன், எம். ஏ. எழுதிய

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

அறிஞர் அண்ணு, நாவலர் நெடுஞ்செழியன்- ஆகியோரின் முன்னுரையுடன்

விலை: ரூபாய் 1—50

★

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி. எழுதிய

அபிசீனிய அடிமை

மு. கருணாநிதி அவர்களின் முன்னுரையுடன்

விலை ரூபாய் 1.

விபரங்களுக்கு;

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை ரோடு. திருச்சி—8.

ஊருக்கு உபதேசம் - செய்வதெல்லாம் அநியாயம்!

★ 4—ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய மார்க்கட்டிலே அவை விற்பனையாகவில்லை.

★★ உடன் இந்திய அரசு என்ன செய்தது?

அந்தத் துணிகளை அப்படியே வேறு நாடு ஒன்றிற்கு ஏற்றுமதி செய்தது.

இதனால் இந்திய அரசுக்கு லாபம் கிடைக்காவிட்டாலும்; நஷ்டமாவது ஏற்படாமல் இருந்ததா?

அதுதான் இல்லை. **இந்தத் துணி பரிவர்த்தனையால் இந்திய அரசுக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம் ரூ. 55 இலட்சமாகும்!**

✻✻ கணக்குக் குழுவினர் இதுபற்றி என்ன கூறியிருக்கிறார்கள், தெரியுமா?

"டெக்ஸ்டைல் கமிஷனருக்கும், அரசாங்கத்தின் வர்த்தக இலாக்காவிற்குமிடையே சரியான ஒத்துழைப்பு இருந்திருக்குமானால் இந்த நஷ்டத்தைத் தவிர்த்திருக்க முடியும்!"

—இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கிறது ஊழலை அனுமதித்து வளர்த்துவரும் ஆட்சி பீடத்திற்கு!

இது மட்டும்தானா? இதுவாவது பழைய நிகழ்ச்சி; இப்போதாவது அரசாங்கத்தின் திறமை அதிகரித்திருக்கிறதா?

அதுதான் இல்லை!

★★★★ பம்பாய் அரசாங்கம் தனது அமைச்சர்களது உபயோகத்திற்காக இப்போது ஒன்றல்ல; இரண்டல்ல; **பதினேழு** கார்களை வாங்க உத்தேசித்திருக்கிறது.

மந்திரிமார்கள் உபயோகப்படுத்தப்போகும் இந்தக் கார்களுக்காகும் செலவு **முப்பத்தேழு இலட்சம்** ரூபாய்களாகும்!

★★ இப்போது பம்பாய் அமைச்சர்களுக்குக் கார்கள் இல்லாமலா இருக்கிறது?

இருக்கிறது; உயர்ந்த ரகக் கார்களையே அவர்கள் வைத்திருக்கிறார்கள்! இருந்தாலும் அவர்களது 'புதுக் கார் யோகம்' தணிந்தபாடில்லை! வரிப் பணத்தில் முப்பத்தி ஐந்து லட்சம் ரூபாய்களுக்குச் செலவு வைக்கிறார்கள்!

★★★ முறை கெட்ட வியாபாரத்தில் ஈடுபட்டதன் காரணமாக 55 லட்சம் வீண்!

தேவையற்ற வாகனங்கள் வாங்குவதன் மூலம் 35 லட்சம் வீண்!

—இதுபோன்ற யாருக்கும் பயன்படாத வீண் செலவினங்களைக் குறைத்துக் கொள்ள முடியாதவர்கள்தான் பொது மக்களைப் பார்த்து நகைகளைக் கேட்டிருக்கிறார்கள்! பட்டினி கிடக்கச் சொல்லுகிறார்கள்! ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் ஏற்பட இருப்பவைகளுக்காக இப்போதே தியாகம் செய்யச் சொல்லுகிறார்கள்!

★★★ காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா —என்று உபதேசம் செய்து கொண்டிருக்கிறான் துறவி!

'பெண்ணுவ தொரு மாயப் பிசாசு' என்று பாட்டிசைத்துக் கொண்டிருக்கிறான்!

—இவை யெல்லாம் நான்கு பேருக்கு மத்தியில்தான்!

ஆனால் இரவு நேரத்திலோ அந்த ஊருக்கு உபதேசி கால் கை அமுக்கிவிட சில காரிகையருடன் பொற்காசுகளைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்?

அப்படித்தான் இருக்கிறது நாட்டு மக்களைத் தியாகம் செய்யச் சொல்லி விட்டு; இவர்கள் 'அடித்தது யோகம்' என்ற வகையிலே பொதுப் பணத்தை ஆடம்பர வாகனங்கள் வாங்குவதற்கும்; இதர வகைகளுக்கும் செலவிடுவது! ஃ

விற்பனையாகிறது

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணா : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும். முன்பணம் அனுப்புவோருக்கே முதல்சலுகை தரப்படும்.]

எம். கே. பதிப்பகம்,

த. பெ. 712. : : சென்னை—6.

பாராளுமன்றத்தில் 'பட்ஜெட்' பாமாலை!

○ ○ "இந்த பட்ஜெட் முறையால் சோசலிசம் ஏற்படுவது சந்தேகமே!"

—எஸ். ஏ. டாங்கே.

○ ○ 'துன்பப்படும் மக்களுக்கு மேலும் துன்பம் அதிகரித்துள்ளது"

—கிருபளானி.

○ ○ "சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கும் பண்டங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதால் கைச் செலவு அதிகரிக்கும்!"

—ஏ. நவாடாட்டா.
(இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர்)

○ ○ "பாமர மனிதனின் இடுப்பை ஒடிக்கிறது இந்த பட்ஜெட்"

—திருவேதி.

○ ○ 'பணக்காரர்களைத் தாஜா செய்ய முயன்று, ஏழைகளுக்கும் வரியை உயர்த்தி, இறுதியில் யாருக்குமே திருப்தியளிக்கவில்லை."

—ராஜு.

○ ○ "ஏழை மத்தியதர வகுப்பினர்மீது அனுவசிய வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன"

—பிராங்க் அந்தோனி.
(ஆங்கில இந்திய நியமன உறுப்பினர்)

○ ○ "விரைவில் சேரிகள் பெருக இந்த பட்ஜெட் வகை செய்துவிடும்.!

—டாக்டர் ராம் சுபாக் சிங்கோ.

○ ○ "குறிப்பாக சொல்ப வருமானக்காரர்களை ஓட்டாண்டியாக்கும் பட்ஜெட்"

—கோரே

○ ○ "பணக்காரர்களுக்கு நிவாரணமளித்து, சாதாரண மனிதனின் சுமையை ஏற்றுகிறது"

—சிம்மாசன் சிங் (காங்கிரஸ்)

○ ○ "மக்களுக்கு மாபெரும் நம்பிக்கைத் துரோகம்,"

—மகந்தி.

○ ○ "சோஷலிசத்தின் சாயையே இல்லை."

—புன்னூஸ்

○ ○ "தலையைச் சுற்ற வைக்கிறது"

—பிரோஸ் காந்தி.

○ ○ இது சரியான பகற் கொள்ளை.

—எல். எம். பானர்ஜீ.

○ ○ 'மூன்று மாதத்திற்கு முன் இந்த பட்ஜெட் வந்திருந்தால் காங்கிரஸ் இன்று அதிகார பீடத்தில் இராது.

—சிவன்லால் சாக்சேனா.

இராணுவச் செலவைக் குறைப்பீர்!

புதிய வரி விதிப்பின் மூலம் சுமார் ரூ. 78 கோடி அதிக வருமானம் கிடைக்கும் என்று கூறுகின்றனர். இதில் ரூ. 53 கோடியை இராணுவத்திற்காகச் செலவு செய்யப் போவதாகக் கூறுகின்றனர். ஏற்கெனவே இராணுவத்திற்காக சுமார் ரூ. 200 கோடி செலவு செய்கின்றனர்.

"இராணுவச் செலவை இந்தியப் பேரரசினர் குறைக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவருக்கும் இராணுவப் பயிற்சியை அரசியலார் அளிக்கவேண்டும். அவசியம் ஏற்படும்பொழுது அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து அவர்களின் பயிற்சியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

—அறிஞர் அண்ணா.

ஆட்டுக்குத் தாடி - நாட்டுக்குக் கவர்னர்!

✻ 7-ம் பக்கத் தொடர்ச்சி

தைக் குறை! கவர்னர் ஏன்? என்னபயன் கவர்னரால் இந்த நாட்டுக்கு? மந்திரிகள் எழுதிக் கொடுக்கிற அறிக்கையை ஏதோ கிளிப்பிள்ளை சொல்லுவதைப் போல சட்ட சபையிலே ஒரு நாளைக்குப் படித்துவிட்டுப் போகிற ஒரு வேலையைத் தவிர —நடன விழாக்களுக்குத் தலைமைவகிக்க வேண்டியதைத் தவிர — 'ஆகா, எவ்வளவு அழகான லாவகம்! நளினம்!' என்று பாராட்டுவதைத் தவிர—இசைக் கச்சேரிகளுக்குச் சென்று, தமிழே தெரியாவிட்டாலும், 'ஆகா, என்ன தமிழ்! என்ன தமிழ்!' என்று பேசுவதைத் தவிர—இந்த கவர்னருக்கு வேறு என்ன வேலை இருக்கிறது? ஆட்டுக்குத் தாடி தொங்குமே அது எவ்வளவு அனுவசியமோ, அதுபோல இந்த நாட்டுக்கு ஒரு கவர்னர் அனுவசியம்! இதை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொல்லுகிறது.

இதைச் சொன்னால், எதை எடுத்தாலும் குற்றம் செல்கிறோம் எனக் குறைபடுகிறார்கள். குற்றம் சொன்னால்தானே ஒரு நாடு திருந்த முடியும்? ஆட்சி செம்மையாக நடைபெற முடியும்? எதிர்க்கட்சி என்பது சட்டசபையிலே வைக்கப்படுகிற ஒரு நிலைக்கண்ணாடி! மந்திரிமார்கள், ஆளும் கட்சியினர் தாங்கள் செய்கிற தவறுகளை அந்த நிலைக்கண்ணாடியிலேதான் பார்த்துக் கொள்ள முடியும். எப்படி முகத்தில் விழுந்திருக்கிற கீறல்களை—வரிக் கோடுகளை—அழுக்குக் கீறல்களை—கண்ணாடியிலே பார்த்து சுத்தம் செய்து கொள்கிறோமோ, அதைப் போல் காங்கிரஸ்காரர்கள்—ஆளும் கட்சியினர்—தாங்கள் நடத்துகின்ற அக்கிரமத் திருவிளையாடல்களை எல்லாம் எதிர்க் கட்சி என்கிற நிலைக்கண்ணாடியிலே பார்த்துத் திருத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய நிலைக் கண்ணாடியாகத்தான் இன்னை தினம் சென்னை சட்ட சபையிலே திராவிடமுன்னேற்றக் கழகம் இருக்கிறது. வேறு ஏதோதோ எதிர்க் கட்சிகள்—காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி என்றெல்லாம் சொல்லுகிறார்கள்; அவைகள் கண்ணாடியாக இருக்கலாம்; ஆனால் ரசமில்லாத கண்ணாடி! திராவிடமுன்னேற்றக் கழகம்தான் ரசம் கொஞ்சமும் குறையாத கண்ணாடி; அசல் 'பெல்ஜியம் கிளாஸ்'! நல்ல முறையிலே—கடமை, கண்யம், கட்டுப்பாடு என்ற 'பிரேம்' போட்டு மாட்டப்பட்டிருக்கிற அந்த நிலைக் கண்ணாடியிலே, "ஏ, காங்கிரஸ் மந்திரிகளே! உறுப்பினர்களே! உங்களது முகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றுதான் வேண்டுகோள் விடுக்கிறோம்.

அவர்களெல்லாம் சினிமாக்காரர்கள் — அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? கருணாநிதிக்கு என்ன தெரியும்? ஆசைத்தம்பிக்கு என்ன தெரியும்? சினிமாவுக்கு வசனம் தான் எழுதத் தெரியும்! அன்பழகனுக்கு என்ன தெரியும்? பள்ளியிலே பாடம் சொல்லித் தரத்தான் தெரியும்! சுப்ரமணியத்துக்கு என்ன தெரியும்? கோவிந்தசாமிக்கு என்ன தெரியும்? சண்முகத்துக்கு என்ன தெரியும்?—என்று கேட்டவர்கள், இன்று 'என்னதான் தெரியாது இவர்களுக்கு?' என்று வியக்கக்கூடிய அளவுக்கு நாங்கள், சட்ட மன்றத்தில் அமர்ந்திருக்கிறோம்.

இவர்கள் அடுக்கு மொழிக்காரர்கள்—அலங்காரத் தமிழ் பேசுகிறவர்கள் — பெண்களை விட்டே நான் அடக்கி விடுகிறேன் என்று திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்திலே மந்திரி சுப்ரமணியம் சொன்னார்; அதைப் போலவே அந்தப் படையையும் அவர்கள் அனுப்பினார்கள். பேசினார்கள்; பெண்மணிகள்! "எதிர்க்கட்சிக்காரர்கள் நாட்டை ஆளலாம் என்று எண்ணுகிறார்கள்! அது முடியாது! அத்தைக்கு மீசை முளைத்தாலல்லவா சித்தப்பா?" என்று ஒரு ஆரணங்கு சட்ட மன்றத்திலே கேட்டார்கள்.

அதற்கு பதில் சொல்லுகிற நேரத்திலே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள், "எதிர்க் கட்சியினர் நாட்டை ஆள முடியுமா என்று கேட்கிறார்கள். அத்தைக்கு மீசை முளைத்தாலல்லவா சித்தப்பாவாக முடியும் என்கிறார்கள். ஆனால் நான் குறிப்பிடுகிறேன், அத்தைக்கு மீசை முளைத்திருக்கிறது — அண்டை வீடாம் கேரளத்திலே!. ஆம்; அத்தை சித்தப்பாவாக மாறி இருக்கிறாள்!" என்று சொன்னார்கள்! அதைக் கேட்ட சுப்பிரமணியம் "பெண்கள் ஏதாவது பேசினால் போனால் போகிறது என்று விட்டு விடுங்கள்; அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்" என்று 'கடற்கரை வீராப்பை' மறந்து விட்டு சரணாகதி அடைந்து விட்டார்! 'பெண்களை விட்டே ஒரு கை பார்க்கிறேன்; பெண்களை விட்டே பதில் சொல்லச் சொல்லுகிறேன்' என்று பேசிய சுப்பிரமணியம், 6-ம் தேதி அண்ணா நிகழ்த்திய உரைக்கு—அன்று மாலையே உடனடியாகப் பதில் சொல்லத் திறனின்றி, ஒருநாள் இரவு முழுதும் பதில் தயாரித்துச் சொன்னார். அதுவும் பாதி பிரச்சினைக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

அதை ஆதரிக்கிற விதத்திலே வடநாட்டு ஆங்கில ஏடுகளெல்லாம் — 'கரண்ட்' போன்ற மிகப் பிரபலமான ஏடுகள் எல்லாம், "அண்ணாதுரை சட்டசபைக்குச் சென்றது எவ்வளவு சரியானது என்பதை நிரூபித்து விட்டார். தி. மு. கழகம் சட்டசபைக்குச் சென்ற பிறகுதான் அங்கே புதிய உற்சாகமும், கருத்துக்களைச் சொல்லுகின்ற விதத்தில் புதிய பாணியும் கையாளப்படுகிறது" என்று பெருமையோடு எழுதுகின்றன. அந்த சட்டசபையில் தி. மு. கழகத்தின் பகுதியிலே நண்பர் சின்னக் கவுண்டர் அவர்களையும் அமர்ந்திடச் செய்யுமாறு இந்தத் தொகுதி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். ●

தாளமுத்துவை இழந்தோம்!

தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்களுள் ஒருவரான தோழர் தாளமுத்து காலிகளின் காட்டுமிராண்டித் தாக்குதலுக்குப் பலியாகி உயிர் துறந்த செய்தி கேட்டுக் கண்ணீர் வடிக்கிறோம்.

கழகத் தொண்டினையே பெரும்பணியாகக் கொண்டிருந்த தோழர் தாளமுத்துவின் மறைவு இயக்கத்திற்கு மாபெரும் இழப்பாகும்.

தூத்துக்குடித் தங்கம் கே. வி. கே. சாமியை இழந்த துயரம் அடங்குவதற்கு முன்னரே மேலும் ஒரு தோழரைப் பலிகொடுத்தது நம்மையெல்லாம் சோகத்தின் எல்லைக்கே கொண்டு சேர்த்துவிட்டது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும்; கழகத் தோழர்களுக்கும் நமது கண்ணீரைத்தான் தர வேண்டியிருக்கிறது.

வாழ்க தாளமுத்துவின் நாமம்!

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

புதரில் கிடந்த உருவத்தை வெளியே தூக்கினார்கள்.

உருவத்தின் முகத்தை உற்று நோக்கினார்கள். அதே கணம் அவர்கள் எவரும் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

காலையில் நகரப் பள்ளியிலிருந்து புறப்பட்ட முத்துவின் அப்பாவும் குமரப்பனும் அப்போதுதான் அங்கே வந்தார்கள். கூட்டத்தை விளக்கிக் கொண்டு உள்ளே பார்த்தார்கள். மறுகணம் "ஐயோ, முத்து! என் கண்ணே!" என்ற பயங்கர அலறலோடு அந்த உருவத்தின் மேல் பாய்ந்தார் அப்பா!

"என்னய்யா இது? இவன்தான் உன் மகனா? நீ சொன்னாயே, அவனா?"—என்று பதட்டத்துடன் வினவினார் பண்ணையார்.

"ஆமாம் ஐயா! இவன்தான்; 'உன் சிறிய மகன் மிகவும் புத்திசாலியாயிற்றே—ஒன்று கேட்கிறேன், கோபித்துக் கொள்ளாதே! எனக்குப் பிள்ளை இல்லாக் குறையை உன் பெருந்தன்மை மூலம் ஈடு செய்வாயா?' என்று என்னைக் கெஞ்சி, உங்கள் மலையொத்த செல்வத்துக்கு சுவீகாரம் கேட்டீர்களே; அவன் இவன்தான் ஐயா!"—முத்துவின் அப்பா புலம்பினார்.

பண்ணையாரின் கண்களில் 'குபுக்' கென்று கண்ணீர் பெருகியது. தன் நெற்களஞ்சியம் தீயுக்கு இரையாக இருந்தபோதுகூட அவர் அழவில்லை; ஆனால் இப்போது தனக்கு சுவீகரமாக வர இருந்த தன் மகன், தன்னாலேயே மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டிருப்பதை அவரால் தாங்கவே முடியவில்லை.

மருத்துவர் வந்தார். முயற்சித்தார். இரத்த தானம் கொடுக்கவும் பாய்ந்தோடி வந்தார், பண்ணையார்! ஆனால்...மருத்துவரின் முயற்சியை எல்லாம் கடந்து—மயான பூமி நோக்கிப் புறப்பட்டு விட்டான் பரிதாபத்திற்குரிய முத்து! ஆனால், அவன் சாகும் போது பண்ணையாரிடம் ஏதோ இரகசியம் சொன்னான்.

●

'எனது இலட்சியம்' என்னை 'போ...போ...' என்று விரட்டுகிறது; நான் போகிறேன் 'நரக' மாக இருக்கும் கிராமத்துக்கு—என்று கிராமத்துக்கு வந்த முத்துவையோ, இந்த உலகத்தை விட்டே 'போ...போ...போ...!" என்று துரத்திவிட்டது—

ஏதோ ஒரு தீய சக்தி!

அது எந்த சக்தி?

அதுதான் 'பண்ணைகளின் மனிதத்தன்மை' மறந்த பயங்கரச் சக்தி!

சாகும்போது பண்ணையாரிடம் ஏதோ சொன்னானே முத்து; அது என்ன? 'கல்லோடு இணைத்திருக்கும் கடிதம் என் சாவுக்குக்காரணமாயிற்று; அதுவே, இந்த கிராமத்து வாழ்வுக்குக் காரணமாக வேண்டும்!'-இப்படித்தான் அவன் சொன்னான்!

அதில் இருந்ததுதான் என்ன? நாங்கள் படிக்க வேண்டாமா—என்று நீங்கள் கேட்கிறீர்கள்!

படிக்கலாம். ஆனால், சூதுச் குகையாக—சதிக்கூடமாக இருந்த பண்ணையார் மாளிகை—இப்போது நேர்மை பரவிய தூய வீடாக மாறிவிட்ட விந்தையை எண்ணி வியர்ந்து கொண்டு, பண்ணையாரின் தனியறைக்குள் நுழைவோம்! அதோ பாருங்கள்; பண்ணையாரின் மேஜையிலே கண்ணாடிச் சட்டமிட்டு ஏதோ, தோன்றுகிறதே—அதுதான் முத்துவின் எழுத்துக்களாகும்... உம்...படியுங்கள்!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

—சொர்ணம்

(முற்றும்)

போ.. போ.. போ..!

சென்ற இதழ் தொடர்ச்சி

கவுண்டங் கோட்டைப் பண்ணையார் சாம்பசிவக் கவுண்டரின் கண்ணியமற்ற செயலுக்கு இலக்காகி, தோட்டத்து மண்ணிலே இரத்தம் சிந்தி வீழ்ந்து கிடக்கும் அந்த உருவம் யாருடையது? உயிர் இருக்கிறதா? அல்லது பன்னெடுங் காலமாக பணத்திற்கு இரையாகி வரும் வாழ முடியாதவர்களின் பட்டியலிலே அதுவும் இடம் பெற்று விட்டதா?—என்ற கேள்விகளுக்குப் பதில் காண்பதற்கு முன்பாக, நாம் விடைகாண வேண்டிய முந்தைய கேள்வி ஒன்றும் இருக்கிறது.

'எனதுஇலட்சிய'த்தைப்படித்து விட்டு தமிழாசிரியரும், கேட்டு விட்டு குமரப்பனும் குமுறி நிற்கின்ற நேரத்தில்-மாடிப்படிகளின் வழியே "முத்து; முத்து" என்று கதறிக் கொண்டு ஓடி வந்தது யார்?

யார் என்று தெரிந்தால் நீங்கள் திகைத்தே போவீர்கள். அதற்கும் மேலாக அதோ, வாயடைத்து, விழி திறந்து, திகைப்பால் திக்பிரமை அடைந்து நிற்கும் குமரப்பனைப் பாருங்கள்!...

"ஐயோ, அப்பாவா?"—குமரப்பனின் அடிவயிற்றிலிருந்து எழும்பியது இந்த அலறல்!

பதிலுக்கு, "எங்கேடா என் முத்து? உன்னோடு அனுப்பி வைத்த என் உயிரை எங்கேடா விரட்டினாய்?" என்று வெறி பிடித்தவரைப் போலப் பாய்ந்தார், தலைவிரி கோலமாக அங்கு திடீரென்று தோன்றிய முத்துவின் தந்தை!

விழிகளில் நீர் நிறைய நிலத்தை நோக்கி நின்றான் குமரப்பன்!

"படித்து, பரிசும் பாராட்டும் பெற்று, பலன் கண்டிருப்பான் என் அன்பு மகன் என்று, களிப்பூட்டும் செய்தி ஒன்று கொண்டு வந்தேனே! என் சிரிப்பிலே நெருப்பைக் கொட்டி விட்டு எங்கேயோ போய் விட்டானே!"—மரணத்திற்கு மகனை இரையாக்கி விட்டவரைப்போலப் புலம்பினார்.

தமிழாசிரியர் இடை மறித்து ஏதோ சொல்ல முன் வந்தார்.

"இந்தச் சேதி கேட்கவா நான் இங்குஓடிவந்தேன்? காலமெல்லாம் மிருகத்தினும் கேடாய் உழைத்து உழைத்து உருக்குலைந்து கிடந்த எனக்கு மகனாகப் பிறந்தானே; பசியும் பட்டினியுமாக வளர்ந்தானே; அந்தத் துன்பத்திற்கெல்லாம் முடிவு வந்தது; வந்தது என்று துயர் துடைக்கும் செய்தி கொண்டு வந்தேனே; என் கண்ணிலே மண் தூவி மறைந்து விட்டானே!" —அப்பாவின் புலம்பல் அடங்கவேயில்லை!

அவரது கதறலின் உட்கருத்து புரியாமல் தவித்தான் குமரப்பன். தந்தை குறிப்பிடும் அந்தத் 'துயர் துடைக்கும் செய்திதான் என்னவாக இருக்கும்?' என்ற வினா உள்ளத்திலே எழுந்து நின்றது. அந்தக் கேள்வியையே விழிகளில் தேக்கி தந்தையின் முகத்தை ஏறிட்டு நோக்கினான்.

"மண் குடிசையிலே பிறந்தான்; மண் புழுவைப்போலச்சேற்றிலும் சகதியிலும் வளர்ந்தான்; நம்பமாட்டீர்கள் நீங்கள்; நினைத்தாலே நெஞ்சு குளிருகிறது; என் அன்பு மகனை மாளிகை வாசமும், மகிழ்ச்சி தரும் வாழ்வும் 'வா... வா...வா...!' என்று இருகைகூப்பி அழைக்கிறது..."

"ஆனால், 'போ...போ...போ!...' என்று அவனை இங்கிருந்துதுரத்தி விட்டது அவனதுஇலட்சியம்!"—என்றார் இதுவரை பேசாதிருந்த தமிழாசிரியர்.

"அப்படியா? எங்கு போனான் அவன்? தெரியுமா உங்களுக்கு? அவன் மட்டும் கிடைத்து விட்டால், உங்களுக்குக் கொட்டித் தருகிறேன் செல்வத்தை!...தயவு செய்து சொல்லுங்கள்...என் மகனைத் தேடி வரும் நல் வாழ்வைக் கெடுத்து விடாதீர்கள்...சொல்லுங்கள்..." என்று தமிழாசிரியரின் தோள்களைப் பிடித்து உலுக்கினார் முத்துவின் தந்தை!

"நான் நினைக்கிறேன்...அவன் உங்கள் கிராமத்துக்குத்தான் சென்றிருக்கவேண்டும்!..."என்று தமிழாசிரியர் சொல்லி முடித்ததும், அவர் குமரப்பனையும் பிடித்து இழுத்துக் கொண்டு அங்கிருந்து வேக வேகமாகப் புறப்பட்டு விட்டார்.

முத்துவின் 'இலட்சியம்' பொதிந்த கட்டுரை தமிழாசிரியரின் கையிலேயே இருந்தது.

★

கூலிகளை—எடுபிடிகளை-இளிச்சவாயர்களை—காசுக்கு நீதியையே விலை பேசும் வீணர்களை ஏவிவிட்டு விட்டோம்; இனி என்ன கவலை; என்ற எண்ணத்தோடு பண்ணையார் சாம்பசிவக் கவுண்டர் கல்லோடு இணைந்து வந்த காகிதச் சுருளை எடுத்தார். எடுத்தவர் பிரித்தார். பிரித்தவர் படிக்குமுன் எதிர்பாராத விதமாக மீண்டும் கணக்கப் பிள்ளையின் அலறலால் நிலை குலைந்து போனார்.

"ஐயையோ, எசமான்! அங்கே பாருங்க எசமான்!..."—என்று அலறினார் கணக்கப்பிள்ளை.

மறுகணம்அவர் காட்டிய திசையில் பார்வையைத் திருப்பிய பண்ணையார் தன்னையும் மீறி "ஐயையோ!" என்று கதறி விட்டார்.

அங்கே...சூரியன் மேற்கு திசையில் மறைந்து சிறிது நேரம் ஆகி விட்ட அந்த நேரத்திலும், கண்ணைப் பறிக்கும் வண்ணம் தகதக வென்று சூரியன் உதிப்பதைப் போன்ற செந்நிற நெருப்புக் கோளம் ஒன்று தெரிந்தது. புதிரேதுமல்ல; தீ!... பெருந் தீ!... விண்மூட்ட வளர்ந்து கொண்டிருந்த பயங்கரத் தீ!

"என்னய்யா அது...?"-பண்ணையார் தன் அடி வயிற்றிலேயே நெருப்புப் பற்றியதுபோல் அலறினார்.

"வைக்கோற் போர் எசமான்! எவன் தீ வைத்தானோ தெரியவில்லையே, எசமான்!"—கணக்கப்பிள்ளையின் உடல் 'வெட வெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தது.

"ஐயோ! பக்கத்திலே நெல் கிடங்கு ஆச்சுதே ஐயா!"--என்று அலறிய பண்ணையார் வெளியே பாய்ந்தார். தோட்டத்தைக் கடந்து, வயல் வரப்புக்களைக் கடந்து, தூரத்தில் கலங்கரை விளக்குபோல் அழைத்துக்கொண்டிருந்த வைக்கோற் போரை நோக்கி ஓடினார். தலை தெறிக்க ஓடினார். கணக்கப் பிள்ளை, தன் குரலின் உச்ச கட்டத்திற்கே சென்று, நினைவு வந்த வேலையாட்களின் பெயர்களை எல்லாம் கூவிக் கொண்டு; பண்ணையாரைப் பின் தொடர்ந்து ஓடினார்.

நன்றாக இருள் படர்ந்து கொண்டு வந்தது. குறுக்குப் பாதை வழியே பண்ணையார் புகுந்து புகுந்து ஓடியதை அப்போது யாரும் கவனிப்பார் இல்லை! அதேபோலத்தான் பண்ணையாரின் ஆட்களால் பயங்கரமாகத் தாங்கப்பட்டு, கீழே புரண்டு கொண்டிருந்த உருவமும், தீயின் கோர சொரூபத்தைக் கண்டு எழுந்து, நடந்து, விழுந்து, தடுமாறி, ஓடிக் கொண்டிருந்ததை யாரும் கவனிக்கவேயில்லை!

தீயுக்கு அருகிலே பண்ணையார் சென்றுவிட்டபோது அவரது கண்களில் நீர் பெருகிவிட்டது! வைக்கோற் போர் முழுதும் சாம்பலாக மாறிக்கொண்டிருந்தது.

கிராம மக்கள் அனைவரும் தீயைச் சூழ்ந்து நின்றனர். ஆனால் அதிசயம் என்ன வென்றால், அவர்களில் ஒருவராவது முன்வந்து அதை அணைக்க முயற்சி எடுக்கவில்லை! சிலை போல் நின்றனர். தீயின் கொடுமையைக் கண்டு மலைத்து அல்ல; தங்களோடு விரோதம் பாராட்டி, பரம்பரைப் பகைவரைப் போல் இழித்தும் பழித்தும் பேசிவிட்ட பண்ணையாரின் சொத்து தானே; தங்களுக்குக் கடுகளவும் பயன்படாத தங்கள் உழைப்பின் விளைவு தானே அது; எரியட்டுமே; அழியட்டுமே!—என்ற வீம்பான எண்ணம் தான்!

நெருப்பு தன் கோர நாக்குகளை நெல் கிடங்கின் பக்கம் நீட்டிக் கொண்டிருந்தது. பண்ணையார் "ஐயையோ!" என்று அலறினார். "பேசாமல் நிற்கிறீர்களே! கொஞ்சம் அணையுங்களேன்!" என்று கதறினார்.

ஒருவரும் அசையவில்லை!

"ஐயையோ! போச்சே! போச்சே!...என் சொத்தெல்லாம் போச்சே!..." என்று ஓங்காரச் கூச்சலிட்டார்.

அப்போதும் ஒருவரும் அசையவில்லை!

"உங்களுக்கு இருதயம் இல்லையா?..." — பண்ணையார் பைத்தியம் பிடித்தவர் போல் பிதற்றினார். நெருப்பு நெல்லையும் ருசி பார்க்கத் துவங்கி விட்டது.

அப்போது — அங்கே யாரும் எதிர்பாராத குரல் எழும்பியது.

"நம் உழைப்பு — நாம் பெற்ற செல்வம் பாழாகிறது...ஐயோ!... ஏன் நிற்கிறீர்கள்?...ம்...பாயுங்கள்!...... அணையுங்கள் நெருப்பை!"

—எங்கிருந்து எழும்புகிறது இந்த சப்தம் என்று அத்தனை பேருடைய கண்களும் தேடின.

"ஆ!... இன்னும் ஏன் நிற்கிறீர்கள்? ஐயோ... உங்கள் உள்ளம் ஏன் இப்படி மரத்துப் போய் விட்டது? சீக்கிரம்!... சீக்கிரம்!"

—ஆணை பிறப்பிப்பது யார்; எங்கிருந்து கிளம்புகிறது; என்று புரியாது விழித்தனர் மக்கள்! நெருப்பு புது வளர்ச்சி பெற்று பரவியது. பண்ணையார் வாய் விட்டு அழத் தொடங்கி விட்டார்.

"ஐயையோ! இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு விட்டீர்களே, பாவிகளே! உங்கள் அன்புள்ளம் எங்கே?... தூய நல்லெண்ணங்கள் எங்கே?... உழைப்புக்குத் துரோகியாகி விடாதீர்கள்! துரோகியாகி விடாதீர்கள்!!..."

—குரல் இன்னும் பேசிக் கொண்டே போவதற்கு முன்னால், அந்தக் குரலில் என்ன கவர்ச்சியைக் கண்டார்களோ, மறுகணமே கிராமத்து மக்கள் தீயிலே பாய்ந்தார்கள்!

கண நேரம்தான்! எங்கிருந்து தான் அவர்களுக்கு உணர்ச்சி தோன்றியதோ—எங்கிருந்துதான் தண்ணீர் குடம் குடமாகக் கிடைத்ததோ — ஆண் பெண், கிழவர் குழந்தை, என்ற வேறுபாடின்றி அனைவரும் தீயுக்கு எதிரிகளாகத் தாவினர்!

பண்ணையாருக்கு உயிர் வந்தது. கிடங்கில் பரவி பல்லாயிரம்ரூபாய்களை புகையாக்க இருந்த தீ கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டே வந்தது!

ஒருமணி நேரத்திற்குள்—

உயிரைத் துச்சமென மதித்து—உழைத்து உரமேறிக் கிடந்த உடல்கள் தீப்புண்களைப்பொருட்படுத்தாது நடத்திய அறுபது நிமிடக் கடினப் போராட்டத்தின் பலனாக தீ அழிந்தது; திடீரென்ற அமைதியும் தோன்றியது!

பண்ணையார் கிடங்கை அப்போதுதான் நெருங்கினார்; சேதமேதுமில்லை! ஆனால் நெருப்புக் காயங்களுடன், கருகிய உடைகளுடன் நின்றுகொண்டிருந்த அவரது 'அடிமை'களைக் கண்டதும்; என்ன நினைத்தாரோ என்னவோ சற்று ஒதுங்கி நடந்தார். ஆனால் அதே நேரத்தில், கிராம மக்களைத் தூண்டிவிட்ட அந்தக் குரல் எங்கிருந்து எழும்பிற்று என்ற சந்தேகமும் அவருக்குத் தோன்றியது. மற்றவர்களும், பேசியது யார் என்ற வினா எழுப்பி விடை தேடிக்கொண்டிருந்தார்கள்.

பண்ணையாரும் மற்றவர்களும் வாயைச் சிறிதும் திறக்காமல் அங்கு மிங்கும் விழிகளைச் சுழல விட்டுக்கொண்டிருந்தனர். அப்போது "ஆ... ஐயோ..." என்ற மெல்லிய முணுமுணுப்பு அடர்ந்த புதர் ஒன்றின் மத்தியிலேயிருந்து எழும்பியது. எல்லோரும் புதரை விளக்கிக் கொண்டு தேடினர். உள்ளே ஒரு பயங்கரக் காட்சியைக்கண்டனர். மண்டைபிளந்து, இரத்தம் கசிந்து விழிகளைக் குளமாக்கும் நிலையிலே ஒரு உருவம் அங்கே புரண்டு கொண்டு கிடந்தது. அதுதான் குரல் எழுப்பி கடமையை உணர்த்தியது என்பதை எல்லோரும் புரிந்துகொண்டு விட்டார்கள். ஆனால் அந்த உருவம்தான் தனது இரும்பு நெஞ்சத்தால் மண்டை பிளக்கப்பட்டு—மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது என்பது அந்தப் பண்ணையாருக்கு மட்டுமே தெரியும்!

✻ 10-ம் பக்கம் பார்க்க

கடைசிப்பக்கம்

எழுத்தாணி

நல்லசாமி; ராஜபாளையம்

(?) காங்கிரஸ் அரசாங்கம் எப்படி இவ்வாறு கண்களை மூடிக் கொண்டு வரி விதித்திருக்கிறது?

பெரிய புராணத்தில் மாதாவைப் புணர்ந்தவனும்; மகளைக் கொன்றவனும் முடிவிலே 'சிவ சிவ' என்றதும் சொர்க்கலோகம் திறந்ததைப் போல; எவ்வளவு கொடுமை செய்துவிட்ட போதிலும் காசைக் கொடுத்து ஓட்டு வாங்க முடியும் என்கிற தைரியம் இருக்கிறபோது; அந்த வெட்கக்கேடான நிலையில் மக்கள் ' இருக்கும்போது— அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு மட்டுமென்ன; கருத்தை மூடிக்கொண்டும் வரி விதிப்பார்கள்; ஏழை நடுத்தர வர்க்கத்தவரின் முதுகிலே கொள்ளிக்கட்டையால் வரியும் போடுவார்கள்!

கே. எஸ். அமிர்தலிங்கம்; மாயூரம்

(?) டி. டி. கிருஷ்ணமாச்சாரி யாரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

முன்ஷிக்குப் பிறகு இந்திய அரசியலில் கேலிக்குரிய இடத்துக்கு ஏகவாரிசாக ஆகியிருக்கிறார்!

சோமசுந்தரம்; மதுரை

(?) அச்சுத்தாள் இறக்குமதித் தீர்வை உயர்வை நிதியமைச்சர் ஏன் நீக்கினார்?

அச்சுத்தாள் உபயோகிக்கும் பத்திரிகையின் பேனாமுனைக்கு மாவீரன் நெப்போலியனே பயந்திருக்கிறான்; இவர்கள் எம்மாத்திரம்? அதனால்தான் அதை மட்டும் 'வாபஸ்' பெற்றிருக்கிறார்கள்!

பக்கிரிசாமி; நாகை

(?) பண்டிதரின் இலங்கை விஜயத்தால் என்ன பயன்?

பண்டிதருக்கு இலங்கைவரை உல்லாசப் பயணம் நடத்த ஒரு வாய்ப்பு கிடைத்தது; அவ்வளவுதான்!

சண்முகவேலாயுதம்; மேலசற்கொண்டார்கோட்டை

(?) பாராளுமன்றத்தில் ராஜகுமாரி அமிர்தகௌர் அரசாங்கத்தை எதிர்த்து இவ்வளவு காரசாரமாகப் பேசியிருப்பதன் அர்த்தமென்ன?

அவருக்கு மீண்டுமொரு பதவி எலும்புத் 'துண்டை வீசியெறிந்திருந்தால் மௌனமாகியிருப்பார்!

கோபாலகிருட்டினன்; சிங்காநல்லூர்

(?) கவர்னர் தனது உரையை தமிழில் ஆற்றாதது ஏன்?

தமிழ் ஆட்சிமொழியாகியிருக்கும் லட்சணம் இதுதான்!

சண்முக வடிவேலு; உறந்தை

(?) கிருஷ்ணமேனன் பாதுகாப்பு மந்திரியாக இருப்பதற்குத்தகுதியுள்ளவர்தானா?

'ஜீப்' கார் ஊழல் போன்ற விவகாரங்களில் பொது நிதிப் பாதுகாப்புக்குத் தகுதியற்றவர் என்று நிரூபிக்கப்பட்ட இவரது தகுதி இனிமேல்தான் தெரிய வேண்டும்!

கோதண்டராமன்; அவிசாவேள்ள

(?) வி. வி. கிரி எப்படி கவர்னரானார்?

அவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றிருக்கிறார். பண்டிதரின் ஜனநாயகத்தில் கவர்னர் ஆவதற்கு இதைவிட வேறு தகுதி என்ன வேண்டும்?

சே. கதிர்வேலு; கோலார் தங்கவயல்

(?) ரஷ்யாவிலே குருஷேவ் மேஜைமீது காந்தியார் சிலையொன்று இருக்கிறதாமே?

ஆமாம்; குருஷேவ் மேஜையில் அறத்தின் திருவுருவம் காந்தியார் சிலை இருப்பதும்; பண்டிதர் மேஜையில் சர்வாதிகாரி என்று பெயரெடுத்த ஸ்டாலின் சிலையும் இருந்தாலும் இப்போது ஆச்சரியமொன்றுமில்லை!

மு. கருணாநிதி நிகழ்ச்சிகள் :

மே– 24 மேட்டுப்பாளையம் [ஊராண்மைக் கழக வரவேற்பு.]

,, 25 எடமேலையூர்

,, 26 குடவாசல் (பாரத் சேவக் சமாஜ்-சிறப்புக் கூட்டம்.)

மன்னார்குடி

,, 30 குளித்தலைத்தொகுதி

வியாபாரம்

8–ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றுக் கொண்டார். முகத்தில் திருப்தி நிலவியது அவருக்கு.

எனக்கு இந்த நேரத்தில் ஒரு சந்தேகம் வந்து விட்டது. அதை யூலியன் காது கேட்கும் படியாகவே வேறொருவனிடம் கேட்டேன்.

"இந்தக் கனவானுக்குக் கல்யாணமாகி விட்டதா?"

"இல்லை!" என்ற பதில் வந்தது. அதை நான் கேட்டது தப்பு என்ற முறையில் அவர் பதில் சொன்னார்.

★

இப்போது ஐந்து வருடங்களுக்குப் பின்...நான் ஒரு மாதா கோவிலின் வழியாகப் போகிறேன். அங்கே ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்ததற்கு அடையாளமாக விசேஷ அலங்காரம்!... கூட்டமாக மக்கள்...! நான் உள்ளே நுழைந்தேன்.

மாப்பிள்ளையைப் பார்த்தவுடன் நான் ஆச்சரியப்பட்டேன்...யூலியன்தான்! வேறு யாருமில்லை. அவர் அருகில் இருந்த பெண்ணையும் என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. பதினொரு வயதுப் பெண்தான்...பதினாறு வயதுப் பெண்ணாக–பூத்துக் குலுங்கும் பருவப் பெண்ணாக மலர்ந்திருந்தாள்! அவள் முகத்தில் ஏன் இவ்வளவு சோகம்? மணப் பெண் களிப்போடு இருக்க வேண்டிய நேரமல்லவா இது?

'என்னை இங்கிருந்து விட்டால் போதும்!' என்று அவளுடைய கண்கள் கெஞ்சுவது போலிருந்தன எனக்கு! ஆம், அது பொருத்தமில்லாத ஜோடிதான்!

நல்ல வியாபாரம்தான் இது...ஆனால் இதை முடிக்க யூலியன் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார் என்றே எனக்குத் தோன்றியது. நான் அதிக நேரம் அங்கு நிற்காமல் வெளியேறினேன்.

★

இயக்க கீதம் எழுப்ப - - -

முரசொலி நாடக மன்றம்

அளிக்கும்,

? ? ?

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4–128, மவுண்ட்ரோடு, சென்னை–6. தமிழ்நா(